# பொதுமேடைக் கூட்டம் குழப்பத்தில் முடிவு!

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் ட்கட வேண்டும்
தபால் அல்லது ஆமூலாப் அனுப்பப்படும்.

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 71
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66 -00

யாழ்ப்பாணம் சித்திரை 10 ஸபர் 16 வியாழக்கிழமை [23-4-70]

## தனிப்பட்ட தாக்குதலால் அமைதி சீர்குலைவு

யாழ்ப்பாணம், வியா உடுவில் முன்னாள் எம். பி. திரு வி தர்மலிங்கத்துக்கும் தமிழ்காங்கிரஸ் உடுவில் வேட்பாளர் திரு என், சிவநேசனுக்குமிடையில் சண்டிலிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுமேடைக் கூட்டம் இறுதிக் கடடத்தில் குழப்பத்தில் முடிந்தது.

நேற்றிரவு 7-30 மணிக்கு ஆரம்பமான கூட்டத்தில் காங்கிரஸ் வேட்பாளர் திரு சிவனேசன் இரவு 8-35மணி வரை பேசிக்கொண்டிருந்த போது அமைதி நிலவியபடியிருந்தது. இரவு 8.35 மணி தொடக்கம் 10 மணிவரை திரு தர்மலிங்கம் பேசினார். அப்பொழுதும் சபையில் அமைதி நிலவியது.

10 மணிக்குப் பின்னர் திருதர்மலிங்கத்தின்பேச்சுக்களுக்குபதில்அளிப்பதற்காக சிவனேசனுக்கு அரை மணி நேரம்பேச சந்தர்ப்பமளிக்கப்பட்டது. இவ் வேளையில் திரு தர்மலிங்கத்தை தனிப்பட்ட முறையில் திரு சிவனேசன் தாக்கிப் பேசியதைத் தொடர்ந்து கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் கூட்டக்கட்டுப்பாட்டையும்மீறி சபையிலிருந்து கைதட்டல் கிளம்பியது' சட்டுப்பாட்டை மீறி கரகோசம் செய்யவேண்டாமென தலைவர் கேட்டுக்கொண்டார். ஆயினும் திரு. சிவனேசன் பேசும்போது இடையிடையே கைதட்டப்பட்டதால், பொலிசார் தலையிட்டனர்.

திரு. தர்மலிங்கம் ஒரு முறை ஆட்சிமன்றத்தில் சட்டையை மடித்துக் கொண்டு பேசியதாகவும் அப்போது சபாநாயகரால் கண்டிக்கப்பட்டதாகவும் கூறிய திரு. சிவனேசன், இவர்களைப்போன்று சபையில் நடந்துகொள்ளத்தெரியாதவர்களை ஆட்சிமன்றத்துக்கு அனுப்புவதில் என்ன நன்மை என்று தனிப்பட்ட முறையில் பேசஆரம்பித்தார்'

தர்மலிங்கத்தின் சட்டப் படிப்பு. சொத்து விடயமாகவும் திரு சிவனேசன்குறிப்பிட்டுப்பேசினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தர்மலிங்கத்தின் ஆதரவாளர்கள் பொலிஸ் கட்டுப்பாட்டையும் மீறி மேடையை நோக்கிச் சென்றனர் தனிப்பட்டமுறையில் பேசாதே சொத்துக்களைப் பற்றி பேசாதே என்ற கூச்சல்கள் கிளம்பின சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஜெயதிலகாகூடடத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டார். ஒலிபெருக்கி உடனே துண்டிக்கப்பட்டது

திரு தர்மலிங்கத்தை அவரதுஆதரவாளர்கள் மேடைக்கு வந்து கைத்தாங்கலாக காருக்குத் தூக்கிச் சென்றனர்மேடையில்நின்றுகொண்டிருந்த திரு சிவனேசனை சில நிமிடங்களில் அவரது ஆதரவாளர்கள் தூக்கிச் சென்றனர்.

விபரமான கட்டுரை நாளை வெளிவரும்.

## யு.என்.பி. —சுதந்திரக்கட்சி ஆதரவாளர் மோதல்

### பேராதனையில் சம்பவம்

கொழும்பு, வியா. பேராதனையில் கட்டுப்பாட்டைமீறிய கூட்டத்தினர் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் நடத்தியதால் 10பேர் காயமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிகல என்ற இடத்தில் நடந்த ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டத்தடியால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரின் ஊர்வலம் சென்றபோது குழப்பம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருகட்சியினரும் மோதிக்கொண்டதாகவும் இருபக்கத்திலிருந்து போத்தல்கள் வீசப்பட்டதாகவும் மேலும் பொலிஸார் தெரிவித்தனர்.

போராதனை பொலிஸ் இன்பெக்டர், தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, தடியடி பிரயோகம் செய்து கூட்டத்தினரை கலைக்க முயற்சித்த போது சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கண்டியிலிருந்து வந்த

## புதிய பல்கலைக்கழகம்

# வடக்கிலா? கிழக்கிலா?

# 28-ம் திகதி முடிவு தெரியும்

கொழும்பு. புதன் புதிய பல்கலைக்கழகம் வடக்கிலா, தெற்கிலா என்ற கேள்விக்கு இம் மாதம் 28-ம் திகதிவிடை கிடைக்கலாம் என்று தெரிகின்றது.

உயர்கல்விதேசிய சபை 28-ம் திகதி இதுபற்றிய தனது முடிவை அறிவிக்கும் என்று நம்பகமான ஒரு தகவல் கூறுகின்றது.

புதிய பல்கலைக்கழகத்தை எங்கே நிறுவுவது என்பதுபற்றி விசாரணை நடத்திய பல்கலைக் கழகக்குழு தனது சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையை இன்று உயர்கல்விதேசிய சபையிடம் கையளிக்கவிருந்தது.

உயர்கல்வி தேசிய சபைத்தலைவர் டாக்டர் மலலசேகராவின் தலைமையில் நிறுவப்பட்ட பல்கலைக் கழகவிசாரணைக் குழு வடபகுதியிலும் கிழக்குமாகாணத்திலும் விரிவானமுறையில் விபரங்களை சேகரித்துள்ளது. இப்பிரதேசங்களிலிருந்து கல்விமான்களும் அரசியல் தலைவர்களும், இதர பிரமுகர்களும் இக் குழுவினர் முன்தோன்றி தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். பல்வேறு நிறுவனங்களும் தங்கள் கருத்துக்களை மகஜர்கள் மூலம் தெரிவித்துள்ளன. மேலும் இந்தக்குவினர் பல் கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு உகந்ததாகக்கூறப்பட்ட இடங்களையும் பார்வையிட்டிருப்பதாத் தெரிகின்றது.

பேராசிரியர் சின்னத்தம்பி, திரு. அதிகாரம் ஆகியவர்களும் இந்தக்குழுவில் அங்கம் வகித்தனர் இக்குழுவினர் தமது விசாரணைகளின் முடிவில் அறிக்கையொன்றை தயாரித்து உயர்கல்விதேசியசபையிடம் சமர்ப்பித்துள்ளனர் இந்த அறிக்கையை ஆராய்ந்து அதில்கண்டுளள சிபாரிசுகளை, அனுசரித்து சபை பல்கலைக்கழகத்தை எப்பிரதேசத்தில் நிறுவுவது என்பதைப்பற்றி முடிவு எடுக்கும் என்று தெரிகின்றது.

## 'ஆட்சிமன்றத்திற்கு ஏன் போகிறோம்?'

### அமிர்தலிங்கம் விளக்கம்

தாவடி, புதன் 'தமிழ் மொழிக்காக, தமிழினத்துக்காக, மழை, பனி, வெயில் என்பவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, எத்தனையோ நாசசக்திகளின் எதிர்ப்பையெல்லாம் துச்சமென எண்ணி கச்சேரி வாசலிலே சத்தியாக்கிரகம் இருந்தோப் நாம் ஆட்சி மன்றம் செல்வது சுகபோக வாழ்க்கையை நடாத்த வல்ல. சுபிட்சமான பாதையைத் தமிழ் மக்களுக்குத் திறந்து வைப்பதற்கே நாம்

இவ்வாறு ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத் திறந்த வெளியரங்கில் இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. நா. பசுபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற கூட்டததில் பேசுகையில், உடுவில் தொகுதி முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு, வி. தருமலிங்கம் கூறினார்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்

## 'சொட்டை சொல்லும் வழமை நீங்கவேண்டும்'

### 'சங்கிலியம்' வெளியீட்டு விழாவில் கனகசெந்திநாதன் உரை

யாழ்ப்பாணம், வியா. 'பிள்ளையின் விழாவுக்கு வந்த அடுத்தவீட்டுப்பெண் பிள்ளையின் நிறைவை பாராட்டாது பிள்ளையின் குறையையே சுட்டிக்காட்டுகின்ற மனப்பான்மைபோல், நூல் வெளியீட்டு விழாவில் சொட்டை சொல்லமுற்படுபவர்கள் இன்று உண்டு. இந்தநிலை நீக்கப்படவேண்டும். நூலை உண்மையாக உணர்ந்து பாராட்டவேண்டும்'

இவ்வாறு இரசிகமணி கனகசெந்திநாதன் இன்று மாலை 'ஈழநாடு' காவியப் போட்டியில் பரிசுபெற்ற சங்கிலியம் நூல்வெளியீட்டு விழாவில், நூலை வெளியிட்டு

பாரதி கம்பன் ஆகிய கவிஞர்களின் ஒழுங்கை அனுசரித்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளதுஎன்பதைதங்கம்மா அப்பாக்குட்டி சுட்டிக்காட்டினார்.

கவிஞர் கந்தவனம் பேசுகையில்சங்கிலியத்தின்மூலம் ஈழக்கவிதை உலகில் புது யுகம்பிறந்திருக்கின்றதுஎன்றார்.

ஈழநாடு முன்றிலில் அலங்காரப் பந்தலின்கீழ் நடைபெற்ற இவ்விழாவில் 'ஈழநாடு' முகாமையாளர் திரு. து. சினிவாசகம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியமணி தம்பிரத்தினம் நன்றியுரை வழங்கினார். கவிஞர் வே. ஐயாத்துரை சங்கிலி

## கூட்டாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலே சத்தியாக்கிரகம் இருந்தோப் நாம் ஆட்சி மன்றம் செல்வது சுகபோக வாழ்க்கையை நடாத்த வல்ல. சுபிட்சமான பாதையைத் தமிழ் மக்களுக்குத் திறந்து வைப்பதற்கே நாம் ஆட்சிமன்றம் செல்லவிரும்புகின்றோம். தமிழரின் வருங்காலத்தை நிர்ணயிக்கப் போவது எதிர் வரும் பொதுத் தேர்தல். அத்தேர்தலில், மக்கள் தனிப்பட்ட ஒருவரின் செல்வாக்கிற்காகவோ, அன்றி அனுதாபத்திற்காகவோ வாக்களிக்க கூடாது. கொள்கை, செயல்முறை என்பவை பற்றி நன்கு சிந்தித்து தங்கள் வாக்குக்களை அளிக்க வேண்டும்''

பேசுகையில், உடுவில் தொகுதி முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு,வி. தருமலிங்கம் கூறினார்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் 1956-ம் ஆண்டு தமிழ் மக்களை எதிர்கொண்ட சிங்கள வெறியாட்டம் வருமுன்பதாக 1948-ம் ஆண்டிலேயே இப்படியொன்று வருமென்று தமிழரசுத் தலைவர்கள் கூறியிருந்தார்கள்'' என்றார்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம், திரு. ந. அருணாசலம், பண்டிதர் நா. இராசையா உட்பட வேறுபலரும் உரையாற்றினர்.

கல்விதேசிய சபையிடம் மே... இந்தக்குவினர் பல் பதைப்பற்றி முடிவு ...டுக்கும் என்று தெரிகின்ற...

கூட்டாட்சி

# தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு ஆர். ஜி. கண்டனம்

## தமிழருக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுவிடுமாம்

கொழும்பு, புதன் கூட்டாட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மொழிக் கொள்கையை எதிர்த்து சிங்கள மகாஜனக் கட்சித் தலைவர் திரு ஆர். ஜி. சேனநாயகா ஓர் அறிக்கைஒன்றை வெளியிட்டிருக்கிறார். கூட்டாட்சியினரின் இந்த மொழிக் கொள்கை அமுல் நடத்தப்பட்டால் தமிழுக்கு சம அந்தஸ்து வழங்கப் பட்டுவிடும் என்று திரு சேனநாயகா தெரிவித்திருக்கிறார்.

தமிழருக்குச் சார்பாகச் செல்லும் கூட்டாட்சிக்கட்சியினரை சிங்கள மக்கள் பகிஸ்கரிக்கவேண்டும் என்றும்கூட்டாட்சியினரின் திட்டம் அமுல்நடத்தப்பட்டால் தமிழருக்கு விமோசனம் அளிக்கப்பட்டுவிடும் என்றும் திரு. ஆர். ஜி. சேனநாயகா தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், இடதுசாரி ஐக்கிய முன்னணியும் தமிழுக்கு சம அந்தஸ்து வழங்க முடிவு செய்திருப்பது கண்டிக்கப்படவேண்டியது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்

(சி பி ஏ)

## "உரிமைகளுக்குப் போராடுவேன் தொகுதியை முன்னேற்றுவேன்"

### கிளிநொச்சித் தொகுதி த. அ. வட்பாளர்

கிளிநொச்சி, புதன் "உங்கள் முன்நிலையில் நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளைத் தந்து நான் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று ஒருபோதும் வரவில்லை. நாட்டை வளப்படுத்துவோமென்றும், தொழிற்சாலைகளைக் கட்டி முடிப்போம் என்றும், எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம் தேடித் தருவோமென்றும். நானுவது, எனது கட்சியாவது ஒருபோதும் கூறியதில்லை. உங்கள் பகுதிகளின் நிலையை நான் இன்று பார்க்கின்றேன். தமிழ் நிலத்தைப் பறிகொடுக்காமல் நீங்கள் எத்துணை கஷ்டத்திலும் துன்பத்திலும் வாழ்ந்து வருகின்றீர்கள் என்பதைத் தமிழினம் மறந்துவிடாது. கடந்த தேர்தலில் நீங்கள் தெரிவு செய்த பிரதிநி இத்தொகுதிக்குச் செய்த சேவையை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். மிகப்பெரிய தொகுதியான கிளிநொச்சித் தொகுதியை வளம் படுத்துவது எத்துணைசிரமமானது என்பதை நீங்களே உணர்வீர்கள். இருந்தும் வடமாகாணத்தில் மிகக்கூடுதலான முன்னேற்றத்தை இத்தொகுதி பெற்றிருக்கின்கிறது. ஆட்சிமன்றத்திற்கு நான் தெரிவு செய்யப்பட்டால் கிளிநொச்சித்தொகுதியை முடிந்த அறவுக்கு முன்னேற்றுவேன் அதே நேரத்தில் தமிழர்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காகவும் தமிழ் நிலத்துக்காகவும் போராடியே தீருவேன்."

மேற்கண்டவாறு பழைய முறுகண்டியில் திரு சதாசிவம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய திரு மு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் ஒருகட்டுப்பாட்டின் கீழ், ஒரு தலைவரின் கீழ் ஒரே இலட்சியத்துக்காகப் போராடுபவரென்று திரு. ஆலாலசுந்தரம் சொன்னார். வேறுபலரும் பேசினர்.


# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 10,657-07 |
| அனுதாபி நல்லூர் | 10-00 |


# 'பொன். இராமநாதனின் பணியை தொடர்ந்து நிலை நாட்டினேம்'

— வி. என். நவரத்தினம்

கைதடி, திங்கள் "நாம் சுபீட்சமாக வாழ வேண்டுமானுல், நமக்கென ஒரு நாடும் மொழியும் வேண்டுமானுல் தந்தை செல்வநாயகத்தின் வழியைப் பின்பற்றுவோம்'' என சாவகச்சேரி சந்தை மைதானத்தில் 'தியாகிகள்' அரங்கில் இரு ரி. இரதிகாந்தன் தலைமையில் நடந்த தென் மராட்சி இளந்தமிழர் மன்ற மகாநாட்டில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: "இலங்கையில் தமிழர்களுமிருக்கிறார்கள் என்ற எண்ணத்தை சிங்கள மக்களுக்கு சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் உணர்த்தினர். நமது முன்னைய தலைவர்களான சேர். பொன் இராமநாதன் போன்றோரின் பணியை நாம் தொடர்ந்து நிலைநாட்டினேம்.

சிங்களக் கட்சிகள் எதுவானுலும் அரசாங்கம் அமைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் திரு செல்வநாயகத்தைத் தேடி வருவார்கள். வரும்போது மூன்று நான்கு மந்திரிப் பதவிகளையும் முன் வைப்பார்கள். ஆனுல் அவர் அவற்றை உதறித் தள்ளி விட்டு அவற்றிற்குப் பதில் தமிழனின் 'விடிவை' முன் வைப்பார்,

இளந்தமிழர் மகாநாட்டைத் தொடர்ந்து மாதர் மகாநாடு திருமதி கிருபைரத்தினம் சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது.

# யு. என். பி. கொள்கை தவறிவிட்டதாம்

### லஷ்மன் டி சில்வா போட்டியிடவில்லை:

கொழும்பு, புதன் யு. என். பி யைச் சேர்ந்த பலப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. லஷ்மன் டி சில்வா இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனது கொள்கையிலிருந்து தவறிவிட்டபடியால் அதன் சார்பில் போட்டியிடப் போவதில்லையெனவும் திரு லஷ்மன்டி சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெவிக்கப்பட்ள்ளது. ஐ. தே. கட்சியைக் கண்டித்து அவர் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த தேர்தலில் பலப்பிட்டித் தொகுதியில் திரு கொல்வின் ஆர். டி. சில்வாவின் மருமகனுடன் போட்டியிட்டு லஷ்மன் டி சில்வா வெற்றிபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி பி. ஏ)

இலங்கை இளைஞர்

## மீண்டும் தோல்வி

மனிலா, ஏப். 22 மனிலாவில் நடைபெறும் ஆசிய இளைஞர் உதைபந்தாட்டச் சுற்றுப் பாட்டியில், இலங்கை இளைஞர் கோஷ்டி மீண்டும் தோல்வி அடைந்துள்ளது.

இலங்கை இளைஞர் கோஷ்டியை, மலேசியா இளைஞர் கோஷ்டி 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இலங்கை இளைஞர் முன்னர் ஈரான் இளைஞரிடம் 8—0 கோல்களால் தோல்வி அடைந்தது

உணர்ந்து பாராட்டவேண்டும்'

இவ்வாறு இரசிகமணி கனக செந்திநாதன் இன்று மாலை 'ஈழநாடு' காவியப் போட்டியில் பரிசுபெற்ற சங்கிலியம் நூல்வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைக்கும்போது குறிப்பிட்டார்.

'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. கே, பி. ஹரன், தலைமையில் கவிஞர் நாகராஜனின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமானஇக்கூட்டத்தில் பழமையின் பண்புடன் புதுமையும் இணையச் சங்கிலியம் ஆக்கப்பட்டதென்று ஆய்வுரைநிகழ்த்தியவித்துவான் க நடராஜன்குறிப்பிட்டார்.

...காரப் பந்தலின்கீழ் நடைபெற்ற இவ்விழாவில் 'ஈழநாடு' முகாமையாளர் திரு. து. சீனிவாசகம் வரவேற்புரை நிகழ்த்தினுர். ஆசிரியமணி தம்பிரத்தினம் நன்றியுரை வழங்கினுர். கவிஞர் வே. ஐயாத்துரை சங்கிலியத்தில் சுவையான பாடல்கள் சிலவற்றைஇசையுடன் பாடினுர்.

நூலாசிரியர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை காவியத்தை நூலுருவாக்குவதில் முன்னின்றுழைத்த அனைவரையும் பாராட்டினுர்.

றுப்பி அட்வட்டைசர்ஸ் ஆதரவுடன் நடத்திய கிரிக்கெட் புதிர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இதற்கு பொறுப்பாளரான றுப்பி அட்வட்டைசர்ஸ் திரு வி, கந்தவேள் நன்றியுரை கூறினுர்.

...தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, தடியடி பிரயோகம் செய்து கூட்டத்தினரை கலைக்க முயற்சித்த போது சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கண்டியிலிருந்து வந்த பஸ் ஒன்றுக்கு ஹிங்குல என்ற இடத்தில் கற்கள் வீசப்பட்டதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (சி. பி ஏ)

# நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல்!

## மே 27 ல் ஏழாவது பொதுத்தேர்தல்

யாழ்ப்பாணம் வியா மே மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் பொது தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

145 தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் நாடுபூராவுமுள்ள 31 நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் இன்று காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை நியமனப்பத்திரங்கள் தா[illegible] செய்யப்படும்.

[illegible]மனப் பத்திரங்கள் தா[illegible]ல் செய்யப்படும் நிலைய[illegible]ர் அமைந்துள்ள வீதிகள் போக்குவரத்துக்குமூடப்பட்டிருக்கும். இவ் வீதி வழியேவேட்பாளரும் அவர்களை பிரேரித்து ஆமோதிப்பவர்களும் ஏஜண்டுகளும் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

கலகம் எதுவும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக சகல நிலையங்களிலும் கலகத் தடுப்புப் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விசேட பொலிஸ் நிலையங்களும் ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ளன. குழப்பம் விளைவிப்போரை உடனடியாக கைது செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தவர்களின் விபரம் இன்று மாலை 6-30 மணி தொடக்கம் இலங்கை வானெலியில் ஒலிபரப்பப் படவிருக்கிறது.

அப்பல்லோ-13 வீரர்கள்

## மீண்டும் அம்புலிக்கு போகத்தயாராம்

நியூயோர்க், ஏப். 22 "இன்னுமொருதடவை விண்ணிலே பறந்து அம்புலியைச்சாடும் முயற்சியில்இறங்கத் தயாராய் இருககிறோம்'' இவ்வாறு அப்பலோ-13 கலத்தில் சென்று சந்திரனில் இறங்கும் முயற்சியைக கைவிட்டு பூமிககுத் திரும்பிய வீரர்ளானஜேம்ஸ் லொவல், ஃபிரேடஹேய்ஸ், ஜோன்ஸ்விகார்ட ஆகிய மூவரும் இன்று நிருபர்களிடம் கூறினுர்களா.

அப்பலோ-13 கலத்தில் வெடிப்பு ஏற்பட்டதினுல் பூமிக்குத் திரும்பிய இவர்கள விபத்து ஏற்பட்டதும் உயிர்களுககும் ஆபத்து ஏற்படடுவிடுமோ என்று எண்ணியதாகக கூறினுர்கள.

அப்பலோ-13 கலம் புறப்பட்ட சுமார் 56 மணிநேரம் ஒருவித பிரச்னையும் ஏற்படவில்லை யென்றும் கலம் அமைதியாகப் போய்க கொண்டிருந்தது என்றும் ஜேம்ஸ் லொவல் கூறினுர். வெடிப்பு ஏற்படடதுப் தாங்கள சாகப்போவதாகக கூட முதலில் எண்ணியதாகஅவர் குறிப்பிடடார்.

# 17 வயது மாணவியை கடத்தினராம்

## 7 பேர் றிமாண்டில்

வல்வெட்டிதுறை, புதன் 17 வயதுப் பள்ளி மாணவி ஒருவர் காரில் கடத்தப்பட்டாராம். இச்சம்பவம் உடுப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது.

உடுப்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியை அதே ஊரைச் சேர்ந்த இ தர்மலிங்கம், கே சின்னையா, கே அரசரத்தினம், ஆர் நவரத்தினராசா, பி தியாகலிங்கம், கே குணரத்தினம், கே இளையதம்பி ஆகியோர் கார் மூலம் கடத்தியதாகக் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது மாஜிஸ்திரேட் எதிரிகளை இம்மாதம் 27-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு கடத்தலுக்காகப் பாவிக்கப்பட்ட காரை ரூபா 5000 பிணையில் கொண்டு செல்ல அனுமதித்து வழக்கு முடியும் வரை காரை ஒருவர் பெயரிலும் மாற்றக்கூடாதெனக் கார் சொந்தக்காரருக்கு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச.ச.நிலைய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, புசன் அல்வாய் தெற்கு பாரதி தாசன் சனசமூக நிலையப் புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்

போஷகர்- திரு ச தவ ராசா, தலைவர்- திரு ந. மகேஸ்வரன், உப தலைவர்- திரு சி சிவகுமார், காரிய தரிசி-திரு ச கிருஷ்ணசாமி, பொருளாளர்-திரு ஆ ஜெக நாதன்.


**லெனின் நூற்றுண்டு விழாவை முன்னிட்டு**

சோவியத் புத்தக- சித்திரக் கண்காட்சி

இடம்: யாழ். மாநகர மண்டபம்.

காலம்: ஏப்ரல் 24, 25 26-ந் திகதிகள்

நேரம்: மு. ப. 8 மணி தொடக்கம் பி. ப. 8 மணி வரை.

பிரவேசம் இலவசம்

2243



## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அரசடி புதியவீதி அரச வெளி, ஆனைக்குட்டி ஒழுங்கை, பருத்தித்துறைவீதி நல்லூர். கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. சி. இராஜேந்திரம், இராஜஸ்தான், மானிப்பாய் தெற்கு. 2060

வில்லியர்ஸ் (Mark 12) பிறஸ்போட் நீர் இறைக்கும் யந்திரம் நல்ல நிலையில் உள்ளது. விபரங்களுக்கு சண்முகா ரேடேர்ஸ், அம்பனை தெல்லிப்பழை. 2110


# தமிழரசுக் கட்சி முற்றவெளிக் கூட்டம்

# 'எத்தனைமுறை அவகாசம் கொடுப்பது?'

## ஜி. ஜி. க்கு அமிர்தலிங்கம் பதில்

தமிழரசுக்கட்சி-தமிழ்க்காங்கிரஸ்பலப்பரீட்சையாக ஆரம்பித்த யாழ்ப்பாணமுற்றவெளிக் கூட்டங்களும் ஊர்வலங்களும், பொன்னம்பலம்- மார்ட்டின் பலப் பரீட்சையாக உருவெடுத்து முடிந்திருக்கிறது. மே மாதம் 27ம் திகதிதான் உண்மைப்பலம்- மக்கள் பலம் யார் பக்கம் இருக்கிறது என்பது தெரியும்.

21ம் திகதி யாழ் முற்றவெளியில் நடந்த தமிழரசுக் கட்சியின் பிரமாண்டமான பொதுக் கூட்டத்தைப் பற்றிய எனது நோக்கு இது.

**பெரி. சுந்தரலிங்கம்**



'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல' என்று பொறுமைக்கு உதாரணம் கூறினார் வள்ளுவர். இந்த யாழ்ப்பாண முற்றவெளி தான் எத்தனை சவால்களையும், எதிர்ச்சவால்களையும், சபதங்களையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணியபோது எனக்கு வள்ளுவரின் இந்த வாக்குத்தான் நினைவுக்கு வந்தது.

20ம் திகதி தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் சொன்ன கருத்துகளுக்கு, தமிழரசார் என்ன பதில் சொல்கிறார்கள் பார்ப்போம் என்ற எண்ணத்தோடு 21ம் திகதி மாலை 7.30 மணியளவில் ஆரம்பமான தமிழரசுக்கட்சி முற்றவெளிக் கூட்டத்திற்குப் போனேன்.

தமிழரசுத் தந்தை த- யாரோ ஒரு பேச்சாளர் கூறியது போன்று 'மெலிந்த உருவமும், நலிந்த தோற்றமும் கொண்ட' திரு எஸ்.ஜே. வி. செல்வநாயகம் மௌனசாமியாரைப் போல ஒவ்வொரு வார்த்தையாகத் தயங்கித் தயங்கி, தனதுவழமையான பாணியில் வெளியிட, அதைவெள்ளம்போல் திரண்டிருந்த அந்த வீரம் கொல் தமிழர் கூட்டம் பய பக்தியோடு, ஆழ்ந்து கேட்டுக் கொண்டுநின்றது.

ஆட்சிமன்றத்திலேயோ காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. செல்வநாயகம் பேசுவதே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு என்றோ ஒரு நாள் தான் ஏதாவது இரண்டொரு வார்த்தை பேசுவார். அப்படிப் பேசுகின்ற அந்த அரிய பெரிய தருணங்களிலும் கூட ஒவ்வொருநிருபரும் பக்கத்தில் உள்ள நிருபரை என்ன பேசினார்? என்று கேட்டு ஒருவருக்கும் முற்றாக விளங்காமல் இறுதியில் 'ஹன்சாட்' அலுவலகத்தில் போய்த்தான் தஞ்சம்புகுவது வழக்கம்; திரு. சி. பி. டி. சில்வாபேசினாலும் இதே திண்டாட்டம் தான்.

என்றாலும்பெரும்பாலான பொதுக் கூட்டங்களில் தந்தை சொல்வதை உரத்து சொல்லத் 'தளபதி' அமிர்தலிங்கம்முன்வருவார். ஆனால் முற்றவெளிக் கூட்டத்தில் அமிர்தலிங்கம் மேடையில் அமர்ந்திருந்த போதும் 'தந்தை' தனியே தான்பேசினார். ஜனசமுத்திரத்தைக் கண்டதால் ஏற்பட்டபுதுத் தெம்போ என்னவோ, தந்தையின் பேச்சு ஓரளவு தெளிவாகவே இருந்தது.

### மொழியும் பிரதேசமும்

அவர்சொன்னார் ஒரு இனத்தைக்கொல்ல வேண்டுமானால் முதலில் அதன்மொழியைக் கொல்லவேண்டும்... இந்தத்திட்டத்தின்படிதான் கல்விமந்திரி நடந்து வருகிறார். தமிழ்ப்பிள்ளைகள் எல்லாரும் சிங்களமொழிமூலம் கல்விகற்கும் திட்டத்தை அமுல்நடத்த முயற்சிக்கிறார், இவர் வெற்றி பெற்றால் தமிழ்ப் பிள்ளைகள் எல்லாரும் அ ஆ இ ஈ என்று படிக்காமல் அயன்னு ஆயன்னு இயன்னு ஈயன்னு என்று படிக்க வேண்டிவரும்

'இரிய கொல்லை கல்விமந்திரி என்பதனால் அதைச் செய்து முடிக்கலாம். டயஸ் பண்டாரநாயக்கா போன்ற எதிர்க்கட்சியினரும் இதைத்தான் சொல்லுகிறார்கள்; எனவே இரு கட்சிகளும் போட்டிபோட்டுக் கொண்டு தமிழ்ப்பிள்ளைகளைச் சிங்களப் பிள்ளைகளாக்கும் திட்டத்தை நாம் முற்றாக எதிர்க்க வேண்டும். அப்படி எதிர்க்கத்தயாராயிருப்பது தமிழரசுக்கட்சி ஒன்றுதான்.

இப்படி மொழி விஷயத்தில் தமிழ்மக்கள் கவனமாக இருப்பதோடு பிரதேசங்களைக் காப்பாற்றுவதிலும் தமிழ்மக்கள் முழுவிழிப்பாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் திருக்கோணமலை மூதூர்போன்ற தொகுதிகள் காலப்போக்கில் சிங்களவர் பெரும்பான்மையுள்ள தொகுதியாக மாறிப் போய்விடும்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கிழக்கைக் கைகழுவி விட்டனர், கிழக்கு மாகாணம் அழிந்து போகட்டும் என்று விட்டுவிட்டனர் அதனால்தான் தமிழ்க்காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் ஒரு வேட்பாளரையும் நிறுத்தவில்லை, அவர்களை விட்டு வைத்தால் [illegible] த்தையும் [illegible] வார்கள்.

இவ்வாறு அமைதியாகப் [illegible] படுத்திக்கொண்டு, 'நேற்று இதே மைதானத்தில் ஒரு ஆட்டம் நடந்தது (சிரிப்பு) மாலை போட வந்தவர்களை கட்டித் தழுவுவதும், முத்தமிடுவதும் இப்படியாக ஒரு வெறியாட்டம், (அதுஉண்மைதான்! கூட்டத்திலிருந்து ஒரு குரல்) நான் பார்க்கவில்லைபார்த்தவர்கள் சொன்னார்கள் என்று சாட ஆரம்பித்தார்'



நாங்கள் கட்டுப்பாடான இயக்கம், ஓர் அரசியல் இயக்கம். வசைபாட வரவில்லை, திட்டித்தீர்க்கவரவில்லை, எங்களிடம் மக்களுக்குச்சொல்ல வேண்டிய செய்தி நிறைய உண்டு. காட்டவேண்டிய பாதையுண்டு'' என்றுமேலே தொடர்ந்தவர், சுமார் எட்டரை மணியளவில் 'யாழ்ப்பாணப்பிரதிநிதியின்- மார்ட்டினின் ஊர்வலம் எத்தனை மணிக்கு வருமோ தெரியாது' என்று அறிவித்தார்.

இந்த வேளையில், உடுவில் தர்மலிங்கம். 'வட்டுக் கோட்டை [illegible]தலிங்கத்தின் காதில் வந்த ஏதோ குசுகுசுக்க விட்டேன் [illegible] என்று ஆரம் [illegible] அமிர்தலிங்கம் [illegible]மாய் காத்திருக்கிறோம். மாற்றுத்திட்டம் தந்தாரா?' பலத்த ஆரவாரமும் கைதட்டலும்).

சென்ற தேர்தலில் 3 மாதம்... (சாவகச்சேரி நவம் குறுக்கிட்டு 3 பேரை அனுப்புங்கள் 3 மாதங்களில் உரிமைகளைப் பெற்றுத் தருகிறேன் என்றார்'' என்று நினைவூட்டுகிறார்) மூம்மூர்த்திகளாக மூன்றுபேரை அனுப்பினால் மூன்று மாதங்களில் உரிமைகளைத் தருவதாகச் சொன்னாரே? எங்கே? (சிரிப்பும் கைதட்டலும்).

### 1948-ம் ஆண்டில் பொன்னம்பலம்

''உரிமைகளைப் பெற்றுத் தருகிறேன் என்றால் எந்த உரிமைகளைப் பெற்றுத் தருவதாகச் சொல்கிறார்'' ''தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்துநில்லடா என்று சொல்லிக்கொண்டு, 1948-ம் ஆண்டு போனவர், மலைநாட்டு மக்களின் ஸ்தாபனமான இலங்கை இந்தியக் காங்கிரஸுக்கு எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மை காயும் முன்னரே, அவர்களைக் கைகழுவிவிட்டு, ஒரு மந்திரிப்பதவிக்காக யூ. என். பி. யோடு சங்கமமாகிவிட்டதால் இழந்த உரிமைகளைக் சொல்கிறாரா! என்று ஆரம்பித்து, பாரம்பரியமான பழம் பெரும் பூமி, பட்டிப்பளை ஆறு பாய்ந்தோடும் பூமி பறிபோயிற்றே அவரது பதவிக்காலத்தில். அதைச் சொல்கிறாரா? எதைச் சொல்கிறார்? மொழியுரிமையா? கொடியுரிமையா? 50க்கு 50 கேட்டு 60க்கு 40 தருகிறோம் என்று [illegible] திலேயே வந்து நின்றுவிட்டு, ஆட்சிமன்றத்திற்குத் திரும்பிப்போய், நனைகிற வாத்துகளைப் போல, புல்லிலே இருப்பதுதான் போராட்டமா என்று நையாண்டி செய்தாராம் பொன்னம்பலம். --இது அமிர்தலிங்கத்தின் முதலாவது குற்றச்சாட்டு.

1956ல் திருமலையாத்திரை -பாதயாத்திரை மேற்கொண்டபோதும் கிண்டல் செய்தார்கள்முட்டுக்கட்டை போட்டார்கள்.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தின்போது வந்து இறங்கிய அந்த தந்தை செல்வாவின் பின்னால் கார்கள் போவதா? தனக்குப் பின்னால் கார்கள் போவதா? என்று பிளவை உண்டாக்கியவர் பொன்னம்பலம் என்று சராமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்.

தமிழ்க்காங்கிரஸ் கொடியைப் பற்றிக் குறிப்பிட வந்த அமிர்தலிங்கம் ''குறுக்காலே ஒரு கோடு-ஆமாம் கொடியிலே குறுக்காலே கோடு போவதுபோல்தான் அவர்களுடைய கட்சியும், அதன் கொள்கைளும் குறுக்காலே போகிறது'' என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறினார்.

சுமார் ஒன்பதரை மணியளவில், டாக்டர் நாகநாதனின் ஊர்வலம் வந்தடைந்தது. யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் சி. எக்ஸ். மார்ட்டினின் ஊர்வலம் வந்து சேராததைக் கண்ட அமிர்தலிங்கம் 'இனி வரவேண்டிய ஊர்வலம் தான் அதி முக்கிய ஊர்வலம்; எல்லாத் தொகுதியையும் வென்று இந்த ஒரு



தொகுதி மட்டும் வெற்றியீட்டாமல் விட்டதால் தானே தமிழினமே தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்று சாதுர்யமாகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்.

இதற்கிடையில் ஓர் இளைஞன் கையில் சிறிது கிழித்துக் காயப்படுத்திக்கொண்டு அந்த இரத்தத்தினால் தமிழரசுத்தந்தைஉட்பட மேடையிலிருந்த எல்லா வேட்பாளர்களுக்கும் இரத்தத்திலகமிட்டார்.

''சும்மா மென்ற வாய்க்கு அவல் கிடைத்தாற்போல, இப்படியாக தனது உடம்பையே கிழித்துக்கொண்டு குருதி கொட்ட இரத்தத் திலகமிட, லட்சோபலட்ச வாலிபத் தோழர்கள் - உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கும்போது அவர்களை ஏமாற்றமுடியுமா?'' என்று உணர்ச்சிபொங்கக் கூட்டத்தினரிடம் கேட்டார்.

இறுதியாக முதல்நாள் தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசியின் பெயர் அடிபட்டது குறித்து சற்று வருத்தப்பட்டவராகச் சொன்னதாவது: ''எனது மனைவியின் பெயரும் நேற்றைய கூட்டத்தில் அடிபட்டதாகச் சொன்னார்கள். நாங்கள்தான் வேட்பாளர்கள். எங்கள் பெயர்

(4-ம் பக்கம் பார்க்க)







ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த

**ஹரிச்சந்திரா**

ராணி (யாழ்ப்பாணம்)

சிவாஜி, கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமலிலிருந்து அதி துரிதமான, அதி பாதுகாப்பான, அதி உறுதியான நிவாரணம் பெற டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை.

### டிஸ்பிரின் அதி துரித நிவாரணமளிக்கிறது

டிஸ்பிரின் கரையக்கூடியதாகையாலும், முற்றாகக் கரைந்து விடுவதாலும், இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிந்து உடனடியாகச் செயலாற்றத் தொடங்குகிறது.

அது விரைவாகச் செறிவதால் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

### டிஸ்பிரின் ஒழுங்கான பாவனைக்கு மிகப் பாதுகாப்பானது

ஒழுங்காகப் பாவித்தால், சில மருந்துகள் காலக்கிரமத்தில் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கும்.

ஒழுங்கான பாவனைக்கு, நீங்கள் நம்பக்கூடிய ஒரு மருந்தையே உட்கொள்ள வேண்டும்.

டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு ஒழுங்கான பாவனைக்குப் பாதுகாப்பானது என்று காணப்பட்டுள்ளது. டிஸ்பிரினை நீங்கள் நம்பிக்கையுடன் உட்கொள்ளலாம். சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, டிஸ்பிரின் கரையக்கூடியதாகையால் அது உங்கள் வயிற்றில் அசௌகரியத்தையும், பாதக விளைவுகளையும் உண்டு பண்ணும் அமிலத்துகள்களை விடுவதில்லை.

### டிஸ்பிரின் டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகமெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணமளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.

### டிஸ்பிரின் தான் நவீன சஞ்சீவி

ஒழுங்கான ஆராய்ச்சியும், தரக்கண்காணிப்பும், டிஸ்பிரினை, தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமலுக்கு நீங்கள் வாங்கக் கூடிய அதி நவீன சஞ்சீவியாக்குகின்றன.

DISPRIN

2 மாத்திரைகளை நீரில் கரைய விட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை. ஆகவே உங்களுக்கு அதி துரிதமான, அதி பாதுகாப்பான, அதி உறுதியான நிவாரணம் வேண்டும் போதெல்லாம் டிஸ்பிரினையே உட்கொள்ளுங்கள்.

ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P.9202


கிழக்கு மாகாணத்தில் ஒரு வேட்பாளரையும் நிறுத்தவில்லை. அவர்களை விட்டு வைத்தால் வடக்குமாகாணத்தையும் கைகழுவிவிடுவார்கள்.

இவ்வாறு அமைதியாகப் பேசிக் கொண்டு சென்றதிரு செல்வநாயகம் திடீரென வவனியாத் தொகுதிமேல் பாய்ந்தார், 'தமிழினம் காக்கப்பட வேண்டுமானால் வடக்கில் தமிழ் காக்கப்பட வேண்டுமானால் வவனியாவில் தமிழ்க் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட வேண்டு' என்று உறுதியாகக் கூறி அடுத்து உடுவில் வேட்பாளர் தர்மலிங்கத்தைப் பேச அழைத்தார்.

### உடுவில் தர்மலிங்கம்

'சில தினங்களாகப் பல கூட்டங்களில் பேச வேண்டியிருந்ததால் கரகரத்த தொண்டையில் பேசுகிறேன்' என்று ஆரம்பித்த தர்மலிங்கம் மற்றக்கட்சிகளை திட்டவரவில்லை என்று சொல்லிவிட்டு தமிழரசுக் கட்சி கடந்த 14 ஆண்டு காலத்தில் என்ன சாதித்திருக்கிறது என்றுகேட்பவர்களுக்கு பதில்கூறமுனைந்தார்.

14 ஆண்டு காலத்திற்கு முன், 1948ம் ஆண்டிற்கும் 1956 க்கும் இடைப்பட்ட காலத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோர் அமைச்சராக இருந்த காலத்தில் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டது. தமிழர்கள் வாழையடி, வாழையாகவாழ்ந்த பிரதேசங்கள் அல்லை, கந்தளாய் போன்ற பிரதேசங்கள் பறிபோயிற்று என்று தமிழ்க்காங்கிரஸ் அரசோச்சிய காலத்தில் தான் தமிழ் மக்களுக்குப் பெருந்திங்கு ஏற்பட்டது. எனக்காட்ட முற்பட்டார் தர்மலிங்கம் பொன்னம்பலம் 50க்கு 40க்கு கேட்ட போது, 60க்கு30தருகிறேன் என்று சொன்னதை ஏற்றுக் கொண்டிருந்தால், 1956-ல் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாதபடி ஆட்சி மன்றத்தில் தமிழ்மக்களின் பிரதிநிதிகளின் பலம் அதிகமாக இருந்திருக்கும் என்பது தர்மலிங்கத்தாரின் வாதம்.

### வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம்

தர்மலிங்கத்தை அடுத்து வந்தார் அமிர்தலிங்கம் அமிர்தலிங்கம் வந்தபின்னர் தான் கூட்டத்தில் களைகட்ட ஆரம்பித்தது. மைக்கிற்கு முன்னால் நின்றபடி வேட்டியைச் சற்றே இறுக்கிச் சரிப் ... கோட்டை அமிர்தலிங்கத்தின் காதில் வந்த ஏதோ குசுகுசுக்க விட்டேனு பார்' என்று ஆரம்பித்தார் அமிர்தலிங்கம்



### 2வருடங்கள் அவகாசம்

''அகில இலங்கை ஆயுட் காலத் தலைவர் (கைதட்டலும் சிரிப்பும்) நேற்று இங்கு 2 வருட அவகாசம் கேட்டாராம். ''(போன தடவை 3 மாதம்கேட்டார்'' என்று செனட்டர் நடராஜா சொல்லிக் கொடுக்கிறார்) ''இப்படி அவகாசம் கேட்டது இது முதல் தடவையல்ல என்று சொன்ன 'அமிர்' 1957-ம் ஆண்டுக்குப் பின்னோக்கிப்போகிறார்.

1957-ம் ஆண்டில், காலஞ்சென்ற பண்டாரநாயகாவுக்கும் செல்வநாயகத்துக்கும் இடையில் ஒப்பந்தம் நடந்தபோது இதே முற்றவெளியில், ஆயிரக்கணக்கான மக்களைக்கூட்டி, ஆடி அமாவாசை தினத்தன்று வேதக்காரரான செல்வநாயம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பண்டாரநாயகாவுக்கு அறுதியிட்டு விற்றுவிட்டார். அந்த ஒப்பந்தத்தைக் கிழித்துவிட்டு வரட்டும் நான் பத்துநாளில் மாற்றுத்திட்டம் தருகிறேன் என்று மார்தட்டினார் (சிரிப்பு). வழக்கம்போல கோட்டை முனியப்பரையும் சாட்சிக்கு அழைத்துக் கொண்டார் (பெருஞ் சிரிப்பு)

''இவருடைய இந்தச் சவாலுக்கு நாங்கள் பதில் சொல்ல, அதை இவருடைய தோழன் டட்லி (சிரிப்பு) பயன்படுத்திப் பிரச்சாரம் செய்ய-சிங்கள மக்கள் வெகுண்டெழ, பௌத்த பிக்குகள் பண்டாரநாயகாவின் வீட்டு முன்றலில் சத்தியாக்கிரகம் செய்ய இறுதியில் ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது.

குரலை உச்சஸ்தாயில் உரத்திக்கேட்கிறார் அமிர்தலிங்கம், 1958-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி பத்தே நாளில் மாற்றுத்திட்டம் தருவதாகச் சொன்ன சத்தியவந்தன். 10நாளல்ல 10 வருஷமல்ல, 12 வருஷ ... பறிபோயிற்றே அவரது பதவிக்காலத்தில், அதைச் சொல்கிறாரா? எதைச் சொல்கிறார்? மொழியுரிமையா? கொடியுரிமையா? 50க்கு 50 கேட்டு 60க்கு 40 தருகிறேம் என்று சொன்னபோது 49க்கு 51 தந்தாலும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு இறுதியில் ஆட்சிமன்றத்தில் 69 சதவிகிதமான சிங்கள மக்கள் 80 சதவிகிதமான ஆசனங்களைப்பெற வழிவகுத்து தமிழ் மக்களின் பலத்தை 80க்கு 20 ஆகக் குறைத்ததைச் சொல்கிறாரா? என்று ஆக்ரோஷமாக அடுக்கிக் கொண்டேபோனார் அமிர்தலிங்கம்!

### 1956ல் தமிழரசின் சத்தியாக்கிரகம்

இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் (தமிழ்க் காங்கிரஸார்) தமிழரசுக்கட்சியின் 'விடுதலைப் போராட்டங்கள்' ஒவ்வொன்றையும் தடுத்துக் கொண்டும் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டும் இருந்ததாகக் குற்றஞ்சாட்டினார்

1956ல் காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் செய்தபோது, சுந்தரலிங்கமும் பொன்னம்பலமும் பொலிஸ் ஜீப்புக்குப் பக்கத்


**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ராஜஸ்ரீ
நடித்த
**நீயும் நானும்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன் - நம்பியார்
நடித்த
**நீயா நானா?**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
THEY CAME TO ROBLASVEGAS
(colour)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
THE SPARTAN GLADIATORS

**ஹரிசந்திரா**

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
**திருடன்**

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
**தங்கச் சுரங்கம்**
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிமுரசுகொட்டும்
102வது தினம்
**கெப்பிட்டல்**
(கொழும்பு)
மகத்தான 71-வது தினம்
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றுபலர் நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**

26-ந் திகதி ஞாயிறு முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
திரைகளில்
சினிமா ரசிகர்கள் வெகு ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த மற்றுமோர்
வெற்றிச் சித்திரம்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நடித்த
**நம் நாடு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் பொருளாதார அமைப்பில் பெருமாறுதல் விரைவில் ஏற்படும்

## பிரஸ்னேவ் அறிவிப்பு

மாஸ்கோ. ஏப். 22 சோவியத் யூனியன் தனது பொருளாதார அமைப்பில் பெரிய அளவில் மாறுதல்கள் செய்யவிருக்கின்றது.

விரைவில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் பொருளாதார மாற்றங்கள் பற்றிய முக்கிய முடிவுகள் பல செய்யப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பிரஸ்னேவ் அறிவித்திருக்கிறார். சோவியத் யூனியனில்ஏற்பட்டிருக்கும் பொருளாதார மந்த நிலைமைக்கு தவறான திட்டமிடுதல்தான் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

லெனின் நூற்றாண்டு தினத்தையொட்டி நேற்று கிரெம்ளினில் நடைபெற்ற கூட்டத்தில் பிரஸ்னேவ் பேசினார். சீனா, அல்பேனியா போன்ற நாடுகளைத் தவிர சுமார் 75 நாடுகளிலிருந்து இந்த விழாவுக்குப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

திரு. பிரஸ்னேவ் தொடர்ந்து பேசுகையில் சீனத்தலைவர்களின் சோவியத் எதிர்ப்புப் பிரசாரங்களைத் கண்டித்தார். சீனாவின் இந்த எதிர்ப்புப் பிரசாரம் கம்யூனிஸத்தின் எதிராளிகளுக்குத்தான் உதவியாகவிருக்கும் என்று திரு. பிரஸ்னேவ் கூறினார். சீன சோவியத் எல்லைத்தகராறுகள் பற்றியும் அதுசம்பந்தமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் பற்றியும் அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

### சீனாவின் கண்டனம்

லெனின் நூற்றாண்டையொட்டி சீன பத்திரிகையான மக்கள் தினசரி வெளியிட்ட ஒரு கட்டுரையில், லெனினுக்கு இப்போதைய சோவியத் தலைவர்கள்துரோகம் செய்துவிட்டார்கள். என்று கண்டித்திருககின்றது இந்தக் கட்டுரையை பீகிங் வானொலியும் நேரத்தோடு ஒலிபரப்புசெய்தது.

### செக். அதிபருக்கு லெனின் விருது

சர்வதேச லெனின் சமாதான பரிசு செக்கோஸ்லாவாக்கிய அதிபர் ஸ்வபோடாவுககு வழங்கப்பட்டிருக்கின்றது. அதிபர் ஸ்வபோடாவுக்கு விருது வழங்கும் வைபவம் கிரெம்ளினில் நடைபெற்றது. இதில்சோவியத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டார்கள்.

# 'தன்னந்தனியாக நின்று தேர்தலில் போராடினேன்'

## நீதிமன்றத்தில் ஜனாதிபதி கிரி கூறியது

புதுடில்லி, ஏப். 22

"ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாளனாகத்தான் போட்டியிட்டேன். எனது குடும்பத்தவர்களைத் தவிர என் உதவிக்கு வேறு யாரும் இருக்கவில்லை" இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி கூறினார்.

இந்திய சுப்ரீம் கோர்ட்டில் தமக்கு எதிராகத் தொடரப் பட்டிருக்கும். வழக்கில் அவர் சாட்சியமளித்தார். தேர்தலின் போது லஞ்ச ஊழல்களும், முறைகேடுகளும் இடம் பெற்றதாகத் தொடரப்பட்டுள்ள இந்த வழக்கில் திரு. கிரி தமது நிலையை விளக்குவதற்காக கோர்ட் யோகித்ததாகவோ தம்மை பிரதமர் இந்திராக் காந்தியின் வேட்பாளராகவோ சொல்லிக் கொண்டதாவோ கூறப்படும் குற்றச் சாட்டுகளையும் திரு கிரி மறுத்தார்.

மூன்று நீதிபதிகள் முன்னிலையில் ஆரம்பமான இந்த விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராள

### நெல்லியடியில் தேநீர்க்கடை பிரவேசம்

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடியிலுள்ள நான்கு தேநீர்க்கடைகளில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் தேநீர்க்கடைப் பிரவேசம் செய்தனர். எவ்வித முன்னறிவிப்பும் இன்றித் திடீரென நடைபெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து சென்ற செவ்வாய்க்கிழமை நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சுமார் 30 பேரடங்கிய சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அடங்கிய கோஷ்டியொன்று நெல்லியடியில் உள்ள தேநீர்க்கடைகளில் திடீரென நாலைந்து பேராகச் சென்று வேறு சமூகத்தவர்களுடன் சமமாக இருந்து தேநீர் அருந்தினராம். ஒரு தேநீர்க்கடை உரிமையாளரே சிறுபான்மைச் சமூகத்தவர்களை அடையாளம் கண்டு கொண்டதாகவும் இதைத் தொடர்ந்துபெரும் கலவரம் மூளும் அபாயநிலை ஏற்பட்ட சமயத்தில் பருத்தித்துறைப் பொலிஸாரின் தலையீட்டினால் . நிலைமை சமாளிக்கப்பட்ட தாகவும் தெரிகிறது.

### வேட்பாளர் கட்டுப்பணம் செலுத்தினர்

திருகோணமலை, புதன்

எதிர்வரும் ஆட்சிமன்றத் தேர்தலில் திருகோணமலையில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

எஸ் எம் ஏ ஜமால்தீன் (எஸ் எல் எஸ் பி), வி ஆர். நவரத்தினராசா (யூ என். பி), [illegible] நேமிநாதன் (தமிழரசு) [illegible] ஆர் ஜி சேனநாயக்கா சிங்கள மகா ஜனக் கட்சி (சுயேட்சை) [illegible]

மூதூர் [illegible] பாளர்களுக்கான கட்டுப்பண

### கூப்பன்களைத் திருப்பி கொடுப்பதேன்?

விஸ்வமடு, புதன்

தற்போது அகில இலங்கையிலுமுள்ள எல்லாவிவசாயப் படை முகாம்களிலுமுள்ள விவசாயப் படைவீரர்கள் அனைவருக்கும் அவர்களின் கூப்பன்களைத் திருப்பிக்கொடுப்பதில் விவசாயப்படையின் தலைமைப்பீடம்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதுகுறித்துவிவசாயப்படைவீரர்களிடத்தில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பொதுத்தேர்தல் அண்மித்து வரும் இந்

### "விவசாயத்தின் மூலம் கைநிறையசம்பாதிக்கலாம்"

உடுப்பிட்டி. புதன்

இளைஞர்களினால் தான் நாடு முன்னேறமுடியும். இன்றைய இளைஞர்கள் சோம்பல் தனத்தினாலும், படித்துவிட்டுவேலைகிடைக்கவில்லையே என்ற விரக்தியினாலும் தமது வாழ்வையும், நேரத்தையும் வீணாக்குகின்றனர். உத்தியோகம் எக்காலமும் நிலையானதல்ல. அதனை நம்பியிருப்பதால் பயனில்லை. ஆதிகாலம் முதல் எம் முன்னோர் செய்து வந்த விவசாயத்தை நாமும் செய்வதால் கைநிறையப் பணம் சம்பாதிக்சலாம்."

இவ்வாறு திரு: கணபதிப் பிள்ளை (சுகனா) ஆசிரியர் அல்வாய் பாரதிதாசன் சனசமூகநிலையத்தின் 6வது ஆண்டுவிழாவில் பேசுகையில் யோசனை தெரிவித்தார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த ஆசிரியர் திரு. ஆ கணபதிப்பிள்ளை தனது தலைமையுரையில் கிராம அபிவிருத்தியிலும், கிராம மக்களின் பொதுப் பணியிலும் தனிநபரால் ஈடுபடமுடியாது. சனசமூகநிலையங்கள் போன்ற இயக்கம் மூலமே கிராம மக்கள் தமது கிராமத்திற்காக உழைக்கமுடியும் என்று குறிப்பிட்டார்.

அல்வாய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. ஜே. எஸ். செல்லப்பா பேசுகையில், "அல்வாய் சுகாதார மாதிரிக் கிராமமாக முன்னணியில் திகழுகின்றது. நாம் 75 வீடுகளுக்குச் சிறுவர்களுக்கான கக்கூஸ் கல்லுகளை இலவசமாக வழங்கியதுடன் சிறுபான்மை மக்களின் நன்மை கருதி அல்வாய், வதிரி முதலிய இடங்களில் 7 கிணறுகளை வெட்டிக் கொடுத்தோம்.

நெசவுசாலை, மாதர் சங்கம் முதலியன [illegible] பொருளாதாரத்தை [illegible]க்கவேண்டுமென்ற ஊக்கம் இளைஞர்களிடமும், இளம் பெண்களிடமும் கிடையாது" என்று கூறினார்.

சன், சமாதான நீதிபதி திரு. மு. சண்முகம், ஆசிரியர் திரு. சி. இராமநாதன், ஆசிரியர் திரு. ச. தியாகராசா ஆகியோரும் பேசினர்.

சைவப் புலவர் திரு. ச. திரவியம் வரவேற்புரை கூறினார்.

### "மோசம் போகாதீர்"

சித்தங்கேணி, புதன்

"உத்தியோகங்கள் பெற்றுத்தருவதாகச் சொல்லும் எதிர்க் கட்சியினரின் பொய் வாக்குறுதிகளை வாலிபர் நம்பிமோசம்போகக்கூடாது முதலில் நமது இனத்தின் விடுதலைக்கு வாலிபர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் உழைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு சித்தன்கேணி கலைநகரில் தமிழரசு வாலிப முன்னணிக் கிளை ஒன்றை அங்குராப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

கலைநகரில் உள்ள தனியார் இல்லம் ஒன்றில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண விழாவில் அவர் பேசுகையில், "லண்டனில் இருந்து சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து. அரசியல் முறைபற்றி இங்கு ஆராய்ந்த குழு, ஒன்று தமிழரின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு சிங்களக் கட்சியும் ஸ்திரமான அரசாங்கம் அமைப்பது சாத்தியமாகாது என்று தெரிவித்துள்ளது வடக்கு, கிழக்கு உட்பட சகல தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளையே ஆட்சிமன்றம் அனுப்ப வேண்டும். நாம், இம்முறை நமது உரிமைகளைக் கொடுக்கும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் எமது ஆதரவைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். நான் எனது ஆட்சிமன்றப் பிரதிநிதுவ வாழ்வில் எனது தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது லஞ்ச ஊழல்களும், முறைகேடுகளும் இடம் பெற்றதாகத் தொடரப்பட்டுள்ள இந்த வழக்கில் திரு. கிரி தமது நிலையை விளக்குவதற்காக கோர்ட்டில் தோன்றினர். இந்திய சரித்திரத்திலேயே ஜனதிபதி யொருவர் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியமளிப்பது இதுவேமுதல்தடவை.

திரு கிரிக்கு எதிராகப் போட்டியிட்ட திரு. சஞ்சீவரெட்டியை அவதூறு படுத்தி வெளியிடப்பட்டிருந்ததாகக் கூறப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பற்றி தாம் எதுவும் அறிந்திருக்கவில்லையென்றும், வழக்கு சம்பந்தமான அறிவித்தல் கிடைத்த பிறகுதான் தாம் இதுபற்றி அறிய வந்ததாகவும் திரு. கிரி கோர்ட்டில் தெரிவித்தார். தமது ஆதரவாளர்கள் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தார்கள் என்றக் குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு மாறுனது என்று திரு. கிரி மறுத்தார்.

வாக்குகளைப் பெறுவதற்காக தவருன முறையில் செல்வாக்கைப் பிரயோகித்த ... ளையும் திரு கிரி மறுத்தார்.

மூன்று நீதிபதிகள் முன்னிலையில் ஆரம்பமான இந்த விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள்.

ஜனதிபதி கிரியை விசாரிக்க தனியாக குழுவொன்றை நியமிப்பது பற்றி கோர்ட்டார் ஏற்கனவே தெரிவித்திருந்த யோசனையை திரு. கிரி நிராகரித்துவிட்டு கோர்ட்டில் நேரடியாகவே வந்து சாட்சியமளித்தார்.

திரு. கிரி கோர்ட்டில் நுழைந்ததும் நீதிபதிகளின் வரிசையிலேயே ஆனல் சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டார் இந்தச் சலுகையைத் தவிர நீதிமன்றத்தில் கட்டுப்பாடான ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டது.

ஜனதிபதி உள்ளே நுழைந்த பொழுது எழுந்திருக்கவோ அவர் கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்த போது திருப்பி வணங்கவோ நீதிபதிகள் முயற்சி எடுக்கவில்லை.

---

இஸ்ரேலிய நிலைகளை

# இரண்டு முனைகளில் எகிப்தியர் தாக்கினர்

கெய்ரோ, ஏப். 22

சூயஸ்கால்வாயின் தென் மூலைப்பகுதியில் இஸ்ரேலிய நிலைகள்மீது கடும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாக எகிப்தியர் அறிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல்களினல் இஸ்ரேலியருக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனல் இஸ்ரேலியர் தம் தரப்பில் மூவர் மட்டும் காயமுற்றதாக அறிவித்தனர்.

சூயஸ்கால்வாயின் வடபகுதியில் எகிப்திய விமானங்கள் இஸ்ரேலிய நிலைகள்மீது கடும்தாக்குதல் ஒன்றை நடத்தியதாகவும் அறிவித்தனர்

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட எகிப்திய விமானங்களில் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேலியர் கூறினர்கள். இதனை எகிப்தியர் ஒப்புக கொண்டுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்ட தங்கள் விமானங்களில் ஒன்றைத் தவர மற்றவை யாவும் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக எகிப்தியர் கூறினர்கள்.

---

## வாலிப முன்னணி உறுப்பினர்

நல்லூர், புதன்

கல்வியங்காடு, கட்டப்பிராய் வாலிப முன்னணி உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்.

தலைவர்: திரு த சபாநாயகம், உபதலைவர்: திரு சி மகாலிங்கம், இணைக்காரியதரிசிகள்: திரு க ஜெயசிறிதரன், திரு பொ சிவலிங்கம் தனதிகாரி: கி ச உறுப்பினர் திரு மா சிவபாதம்.

15 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரியப்பட்டனர்.

......

## புத்தக-சித்திரக் கண்காட்சி

யாழப்பணம், வியாழன்

லெனின் நூற்றுண்டு விழாவை முன்னிட்டு இம்மாதம் 24, 25, 26-ம்திகதிகளில் யாழ் மாநகரசபைமண்டபத்தில் சோவியத் புத்தக-சித்திரக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது.

இக்கண்காட்சியை இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ் பிரதேச தலைவர் திரு. வி. தர்மலிங்கம் (முன்னாள் ஆட்சிமன்ற அங்கத்தவர்) நாளை திறந்து வைப்பார்.

---

...க்கையில் ஈடுபட்டுள்ளது. இதுகுறித்துவிவசாயப்படைவீரர்களிடத்தில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பொதுத்தேர்தல் அண்மித்து வரும் இந்நேரத்தில் விவசாயப்படையினருக்கு அவர்களின் கூப்பன்களை திருப்பிக்கொடுப்பதன்நோக்கமென்னவென்று தெரியவில்லை. கூப்பன்களை திருப்பித்தருவதால் திடிரென்று தமது வேலையையும் நிறுத்தி விடுவார்களோ என்றும் வீரர்கள் பலர் கவலைப்படுகின்றன:

— —

## விசாரணை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, புதன்

இம்மாதம் 4-ம் திகதி கரவெட்டி அரசடி வீதியில் வேலுப்பிள்ளை இராகவன் அல்லது ஆனந்தன் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ததாக அதே ஊரைச் சேர்ந்த எஸ். பாலசுப்பிரமணியம், கே. வன்னியசிங்கம் ஆகியோரைப் பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து றிமாண்டில் வைத்திருந்தனர். திரும்பவும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் இவர்களை ஆஜர்செய்தபோது மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களைத் திரும்பவும் றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை அடுத்தமாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

——

## உடுப்பிட்டியில் ஊர்வலம்

பருத்தித்துறை, புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. கே. ஜெயக்கொடியை ஆதரித்து பெரும் ஊர்வலமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. துன்னலை, கரவெட்டி, நெல்லியடி, நவிண்டில், கரணவாய், வல்வெட்டி ஆகிய பகுதிகளுக்கூடாகச் சென்ற இவ்வூர்வலத்தில் நூற்றுக்கணக்கான கார்கள், டிருக்டர்களைவிட ஏராளமான இளைஞர்களும் கட்சிக்கொடி தங்கிய சைக்கிள்களில் பவனி வந்தனர். இதைத் தொடர்ந்து மாலை மந்திகையில் ஒரு பிரசாரக்கூட்டமும் நடைபெற்றது.

---

நவரத்தினராசா (யூ என். பி), ... நேமிநாதன் (தமிழரசு), ... ஆர் ஜி சேனநாயக்கா சிங்கள மகா ஜனக்கட்சி (சுயேட்சை).

மூதூர் தொகுதி வேட்பாளர்களுக்கானகட்டுப்பணத்தை பின்வருவோர் செலுத்தி... எம் இ எம் முகமதலி(யூ என் பி), ஏ எல் எம். மஜீத் (எஸ் எல் எஸ் பி), ஏ டி எல் லீலாரட்ண(சுயேட்சை), ஆர் எம் குணநிலக்கா(சுயேட்சை).

— —

வா. மு. சங்க

## அங்குரார்ப்பண கூட்டம்

புத்தூர், புதன்

அச்சுவேலி தோப்பு வாலிப முன்னேற்றச்சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி மாலை போதிப் பிள்ளையார் கோவில் முன்றலில் தலைவர் பே. சின்னப்பு ஆசிரியர் தலைமையின்கீழ் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில், சங்கத்தின் நோக்கம், சங்கம் அமைய வேண்டிய இடம் ஆகிய பிரச்னைகள் பற்றி எடுத்துக் கூறி அவற்றைச் சபையின் விளக்கத்திற்கு விட்டார். சபையின் காரசாரமான விவாதத்தின்பின் நிர்வாக சபையின் இயக்கத்தில் சங்க நோக்கங்கள் அமைய வேண்டிய இடம் என்பன விடப்பட்டன.

அடுத்ததாக ஆசிரியர் இ. சங்கரப்பிள்ளை 'இன்றைய சமூகத்தில் இளைஞர் பங்கு' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றி சங்க வளர்ச்சிக்கு எவ்வாறு செயலாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பின்வருவோர் ஏகமனதாக நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. ச. கந்தசாமி, உபதலைவர்: திரு. க. தங்கராசா, செயலாளர்: திரு. மு. ஆறுமுகசாமி, உபசெயலாளர்: திரு. இ. இராசதுரை, பொருளாளர் திரு. பொ. சி: குணரத்தினம், உபபொருளாளர்: திரு. இ. ஞானரத்தினம்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

திருவாளர்கள் இ. சங்கரப்பிள்ளை, பே. சின்னப்பு, எஸ். தம்பிஐயா ஆகியோர் போஷகர்களாகவும், திரு. க. கனகரத்தினம் கணக்குப் பரிசோதகராகவும் நியமிக்கப்பட்டனர்.

---

நெசவுசாலை, மாதர் சங்கம் முதலியன மூலம் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டுமென்ற ஊக்கம் இளைஞர்களிடமும், இளம் பெண்களிடமும் கிடையாது'' என்று கூறினர்.

திரு. விக்கேசுவரதாசன் பேசுகையில், பாரதிதாசன் காட்டிய உண்மைப் பாதையில் நாம் பின்பற்றிச் செல்லவேண்டும் என்ருர்.

'பாத்திரப் படைப்பில் பாரதியின் பாஞ்சாலியும், இளங்கோவின் கண்ணகியும்' என்னும் பொருள் பற்றிச் சைவப் புலவர் திரு. க. நவரத்தினம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர். மற்றும் தலைமையாசிரியர் திரு. வே. கணே...

... நமது உரிமைகளைக் கொடுக்கும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் எமது ஆதரவைக் கொடுக்கத் தயாராக இருக்கிருேம், நான் எனது ஆட்சிமன்றப் பிரதிநித்துவ வாழ்வில் எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் பாரா பட்சமற்ற முறையில்சேவை செய்துள்ளேன்'' என்ருர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழினத்தின் விடுதலைக்கு வாலிபர்கள் மட்டுமன்றி மாதர்களும் தம் பங்கைச் செலுத்தவேண்டும். கடந்த அறப்போராட்டத்தின் போதுஇப்பகுதிப் பெண்கள் காட்டிய வீரம் தமிழினம் உள்ளவரையும் இடம் பெறும்'' என்ருர்.

---

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 10-ம் திகதி [23-4-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- மதிப்பு உயரும், இல்லறத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினல் சமாளித்துவிடுவீர்கள்.

**ரிஷபம்**- புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள், இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்குச் சிறந்த பயனை அளிக்கும். களஸ்திரவழியாலும் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு. வரவேற்கவேண்டியதினம்.

**மிதுனம்**- எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரும். பொறுமை விரும்பத்தக்கது.

**கடகம்**- செய்தொழிலால்சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம். சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும். உற்சாகமான தினம்.

**சிம்மம்**- பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும் கருத்துவேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும். கல்வித்துறையிலும் முன்னேற்றமுண்டு.

**கன்னி**- புதியகோணத்தில் இருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு. துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத்தலைமையுடன் புகழும் தேடிவரும்.

**துலாம்**- பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். உணவுவிஷயத்தில் கவனம் வேண்டும்.

**விருட்சிகம்**- முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித்தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப்போக்கால் சிலரை பகைத்துக்கொள்ளவும் நேரிடும். அமைதி நன்று.

**தனுசு**- போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள். களஸ்திரவழியில் பெருமைகள் வந்துசேரும். ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதமும் ஒன்று கிடைக்கலாம். தொழில்துறையில் வெற்றியும் உண்டு.

**மகரம்**- எதிர்பார்த்தகாரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் பதட்டநிலைதென்படும். இறைநம்பிக்கையும் எதையும் தாங்கும் இதயமும் வேண்டும்.

**கும்பம்**- வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும், செல்வாக்கு பெருகும். செல்வாக்குபடைத்தவர்களின் ஆதரவும் கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும்!

**மீனம்**- அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும். எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.



'அல்கதீன்'

உபயோகிப்பதற்கு மிக இலகுவான குழாய், நீளம் வாய்ந்தது - எளிதாய் வளைந்துகொடுப்பது!

கமத்தொழிலுக்கும், உணவு உற்பத்திக்கும், இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை, இலகுவானதும், திறம்பட்டதும், செலவு குறைந்ததுமான நீர்ப்பாய்ச்சு முறை எது என்பதுதான்.

அல்கதீன் அப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கிறது.

நெடு நீளம் வாய்ந்தது, எளிதில் வளைந்து கொடுப்பது, எடை குறைந்தது, பிரித்தமைக்கக்கூடிய மூட்டுகள் கொண்டது, செலவு குறைவானது, அரிக்கப்பட்டு அழிந்தொழியாதது, நொருங்காதது, உராய்வுச் சேதம் இல்லாதது.

இவற்றுடன் இன்னும் எத்தனையோ குணநலங்கள்!

கமத்தொழில், கட்டிட அமைப்புகள், வீடமைப்பு ஆகியவற்றில் நீர் வசதி பற்றிய பிரச்சினை எது எழுந்தாலும்-அல்கதீன் அவற்றை விரைவாக நீக்கி வைக்கும்.

'அல்கதீன்'

பிற குழாய் வகைகள் யாவற்றினும் சிறந்து விளங்குவது!

CIC

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்., தபால் பெட்டி இல: 352, கொழும்பு.

AJNS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
மோட்ச சாம்ராஜ்யமானது வயலில் நல்ல விதை விதைத்த மனிதனுக்கு ஒப்பாக இருக்கிறது.
-- யேசுநாதர்.

# ஈழநாடு

Eelanadu N. tional Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 10-ந் திகதி (23-4-70)

## நல்லவர்களுக்கே வாய்ப்புக் கிடைக்கட்டும்

அடுத்த தேர்தலில் எத்தனை கட்சிகள் போட்டியிடுகின்றன; எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்? இவற்றுக்கு இன்று பதில்தெரிந்துவிடும். வேட்பாளர்கள் இன்று தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய விருக்கின்றனர். பெரும்பாலும் வேட்பாளர்கள் யார் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஷயந்தான். என்றாலும் சில இடங்களில் வேட்பாளர்களில் திடீர்மாற்றங்களும், திடீர்பிரவேசங்களும், இருக்கக்கூடும், தேர்தல்முடிவுகளிலும் கூட ஆச்சரியத்தை ஏற்படுத்தக்கூடிய திடீர்த் திருப்பங்கள் ஏற்படலாம்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு எட்டு அரசியல்கட்சிகளுக்குத் தான் தேர்தல் கமிஷனர் அங்கீகாரம் அளித்திருக்கிறார். எட்டுக் கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களைப் பெரும்பாலும் தெரிவு செய்துவிட்டன. அங்கீகரிக்கப்படாத கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களை பெரும்பாலும் தெரிவுசெய்துவிட்டன அங்கீகரிக்கப்படாத கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களைத் தெரிவுசெய்துவிட்டன. கட்சி சார்பில் போட்டிக்கு நிற்காத, கட்சி 'டிக்கட்' கிடைக்காதவர்களும் சுயேச்சையாகப் போட்டியிட முன்வந்துள்ளனர். அவர்களும் இன்று தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்வர். முக்கிய அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைத் திட்டங்களை விளக்கி தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருக்கின்றன. சுயேச்சையாளர் தங்கள் கொள்கைகள் திட்டங்களை விளக்கி அறிக்கை வெளியிட்டுள்ளனர்,

கொள்கை அறிக்கைகள் தேர்தலுக்குத் தேர்தல் சமயத்தில் வெளியிடப்படுவதும் தேர்தல் முடிந்தபின் அவற்றைக் கட்சிகளும் வேட்பாளர்களும் மட்டுமல்ல வாக்காளர்களும்கூட மறந்து

ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்புள்ள இருபெரும் அரசியல்கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் 1956-ம் ஆண்டிலும் அதன்பின்னர் நடந்த தேர்தல்களிலும் பின்பற்றிய வகுப்புவாதக் கொள்கைகளை இம்முறை விட்டு நாட்டின் அபிவிருத்தியையும் தேசியஐக்கியத்தையும் வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருப்பது நாட்டின் எதிர்காலம்பற்றி நம்பிக்கையளிப்பதாகவிருக்கிறது. தேர்தல்பிரசாரத்திலும் இந்தமுறையைப் பின்பற்றினால் இன்னும் சில வருடங்களில் சுபீட்சப்பாதையில் காலடி எடுத்துவைக்குமென்பது திண்ணம்.

வகுப்புவாதத்தைக் கிளப்பி குறுக்குவழியில் அரசியல் ஆதாயம்பெறலாமென்ற நோக்குடன் ஒருசில அரசியல்வாதிகள் தங்களுக்கென கட்சிகளையும் ஆரம்பித்து பிரசாரம்செய்து வருகின்றனர். இவர்களின் பிரசாரம் வெற்றியளித்து விடுமோவென்ற அச்சத்தில் சிலர் தங்கள் கட்சிக்கொள்கைகள் நல்லவையாக இருந்தாலும் அவற்றைவிட்டு அவர்களுக்கு ஒருபடி மேலே சென்று வகுப்புவாதத்தைக் கக்கத்தொடங்குவதும் நமது நாட்டில் முன்னரும் கண்டு கேட்டறிந்த உண்மை

நாட்டின் நலனையும் மக்களின் ஐக்கியத்தையும் கட்சிக்கொள்கையில் உறுதியுமுடைய நேர்மையும்; கண்ணியமும், கட்டுப்பாடும் உடையவர்களையே கட்சிகள் தங்கள் வேட்பாளர்களாக நிறுத்தினால் வகுப்புவாதத்துக்கு வளைந்துகொடுக்க மாட்டார்கள். வாக்காளரும் சிரமமில்லாமல் நல்லவர்களை நேர்மையானர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வர். அரசியலும் தூய்மைபெறும் ஜனநாயகமும் வெற்றிபெறும் வேட்பாளர் மனுத்தாக்கல் செய்யும் இன்றைய தினத்திலாவது இதைச் செய்ய கட்சி

# 'ராணுவ அட்டூழியத்தை ஒழிக்க கூடுமானவரை பாடுபட்டேன்'

ஆட்சி மன்றத்திற்குப்போய் சாதித்தது என்ன என்ற எமது போட்டித் தொடரில் பருத்தித்துறை ஆட்சிமன்ற முன்னாள் உறுப்பினர் திரு.கே. துரைத்தினம் அளித்த பேட்டியின் பிற்பகுதி இங்கு தரப்படுகின்றது. பேட்டி கண்டவர் பழனிப்பிள்ளை.

### தொண்டமானாறு துறைமுகம்

மீன்பிடித்தொழில் அபிவிருத்திககு தேசியஅரசாங்கம் போதுமான உதவிகளைச் செய்யவில்லை. இயந்திரசாதனங்களின் இறககுமதிககு கூடுதலான பீகஸ் வரி போடப்பட்டிருந்ததனால் வாதடி அதை நீக்கச் செய்திருககிறேன், தேவையானஅளவு இயந்திரங்களோ, அல்லது உபகரணங்களோ இப்போதும் கிடைப்பதில்லை உடனடி பலன் தரககூடியதாக இது இருந்தும் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை வடபகுதியில் 50 வீதத்தினர் மீன்பிடித் தொழிலாளர்களாக இருந்தும் சரியான துறைமுகவசதிகள் செய்து கொடுககப்படாததுபற்றி நான் வற்புறுத்தியதன் பேரில் தொண்டமானாறு துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஜேர்மன் நாட்டு நிபுணரின் உதவியுடன் பூர்வாங்க வேலைகள் முடிவடைந்துள்ளன, எனது தூண்டுதலால் மீன்பிடித் கூட்டுத்தான கிளையொன்றும் பருத்தித்துறையில்நிறுவப்பட்டுள்ளன. வலை தட்டுபாடு நீங்காத காரணத்தால் தான் வலைக் களவுகள் அதிகரித்துள்ளன தேவையான வலைகள் வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறேன். மீன்பிடி கூட்டுத்தாபனம் தொழிலாளர்களை மறந்து முதலாளித்துவ முறையிலேயே கடமையாற்றி இருக்கிறது. இது ஏனோ தெரியவில்லை.

கடலட்டை ஏற்றுமதி வியாபாரத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமையை வடபகுதி மீன்பிடி கூட்டுறவு சமாசத்தை நிறுவியதன் மூலம் மீனவர்களின் கைக்கு மாற்றம் செய்திருகிறேன். முதலாளிகளின் சரண்டல் ஒழிந்தது. ஏற்றுமதி உரிமை சமாசத்திற்குத் கடலட்டை, சுறாச் செட்டை, நெட்டி, திருககைமுல் முதலான கிடைத்தது. ஆண்டுதோறும் 15 லட்சம் ரூபாவுககு மேற்பட்ட பொருட்கள் ஏற்றுமதியாகி கொண்டு இருககின்றன. இதனால் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ஆகியவைகளைச் சேர்ந்தவர்

அடைகிறார்கள். இச்சமாசத்தை உண்டாககுவதில் என்னுடன் சேர்ந்து உழைத்தவர்களில் முன்னைநாள் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரும் திட்ட அமைச்சில் தற்போது கடமையாற்றும் பொருளாதார நிபுணருமான திரு. ஆசீர்வாதம் விசேடமாக குறிப்பிடத்தககவர்.

### முந்திரியை செய்கையை ஊக்குவித்தேன்

முந்திரிகைச் செய்கையை இங்கு ஊககுவித்தது தாங்கள்தாள் என்று கேள்விப்படுகிறேன்! என நான் திசை திருப்பினேன் அவரும் தொடர்ந்தார்.

தோலைகட்டியிலும் இளவாலையிலும் புளித்தன்மை வாய்ந்ததிராட்சைப் பழமே பலகாலமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. உப், கமிசனராக இருந்த திரு. திசைவீரசிங்க 8 வருடங்களுககு முன் அமெரிககாவிலிருந்து சில முந்திரிகைத் தடிகளை கொண்டு வந்தார். காய்ந்த தடிகள் என்று கருதி சிலர் அதனைத்தூர எறிந்தனர். பயிரிட்டவர்களே பயன் அடைந்தனர். இதன்பின் 1964-ம் ஆண்டு நான் இஸ்ரேலில் இருந்து திரும்பிய போது 3 வகையான முந்திரிகைத் தடிகளைக கொண்டு வந்தேன். இன்று யாழ்ப்பாணத்தில் நீங்கள் பார்க்கும் கறுப்பு முந்திரிகை பழம் நான் கொண்டு வந்தடனூக் கென்னும் சாதியைச் சேர்ந்தது. இப்போது சுமார் 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட முந்திரிகைப் பழங்களை தென் இலங்கைக்கு ஏற்றுமதி செய்கிறோம், இதை மேலும் விருத்தி செய்யவாய்ப்புண்டு.

### உருளைக்கிழங்கு வெங்காயம்

கே: தங்களை வெங்காய எம். பி, கிழங்கு எம்.பி என்று எல்லோரும் குறிப்பிடுகிறார்களே அது ஏன்?

ப: (லேசாக சிரித்துக் கொண்டே) பொருளாதாரக் கருத்துக்களை பாமரக் மக்களிடம் அறிந்த கருத்துக்களை மக்களுடைய வாழ்க்கைககு ஒட்டியதாக இணைக்க வேண்டும். எங்கள் விவசாயிகளின் பிரதான உற்பத்தியான வெங்காயம் மிளகாய், உருளைக்கிழங்கு முதலானவற்றிகு இருந்து வரும் பிரச்சனைகள்பற்றியும் சிந்திக்க வேண்டும். அரசியல் இயககம் நடத்துவோருககு பொருளாதார கண்ணோட்டமும் இருகக வேண்டும். விவசாயி இது விசயத்தில் எத்தனையோ சிககல்களை எதிர் நோககி இருககிறான், முககியமாக வெங்காய உற்பத்தியைப் பொறுத்தவரை வெளிநாட்டு வெங்காய இறக்குமதி நமது கமககாரர்களைப் பாதிக்கிறது. இதுவிசயமாக பாராளுமன்றத்தில் உள்ளும் புறமும் பல தடவை பிரஸ்தாபித்திருக்கிறேன். இதே போல உருளை கிழங்கு இறககுமதியை தடை செய்ய வாதாடியவர்களில் நானும் ஒருவன். இதன் பலாபலனை யாழ்ப்பாணத்து விவசாயிகள் அனுபவித்து கொண்டு இருககிறார்கள். இவற்றை புரியாதவர்கள் மக்கள் நலனில் அககறை இல்லாதவர்கள் பொருளாதாரம் என்றால் பாமரமககளுககு அப்பால் பட்டது என்று கருதுபவர்கள கிண்டலாக எதையும் சொல்லலாம் அதைப் பற்றி நமககு கவலையில்லை. பயனடையும் ஏழை விவசாயிகள் என்ன சொல்வார் என்பது எனக்குத் தெரியும்.

கே: பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இங்கு நிறுவ வேண்டும் என்று தாங்கள் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த பிரேரணை பற்றிய நடவடிக்கை என்னவாளது?

ப: பாராளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றச் செய்தேன் பனம் பொருள் ஏற்றுமதி மூலம் இந்தியா பெரும்பயனடைகிறது. அதே போல் நாமும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி

— கே. துரைரத்தினம்

பொருட்களை ஏற்றுமதி செய்யவாய்ப்புண்டு, இதை வற்புறுத்தியும்கூட தேசிய அரசாங்கம் கவனம்செலுத்தவில்லை

### சமஷ்டி அரசியல்

கே: சமஷ்டி கிடைத்தால் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரை பொருளாதார அபிவிருந்தி, பரவலான உத்தியோக வாய்ப்பு ஆகியவற்றிற்கு அது ஒரு பிரச்னையாக அமையுமென்ற கருத்தை தாங்கள் எவ்வாறு மறுக்கிறீர்கள்

தமிழ்ப் பிரதேசங்கள் இயல்பாகவே செல்வ வளங்களைக கொண்டது, அந்த இயற்கை வளங்களை சரிவர பயன்படுத்துவதன் மூலம் பொருளாதாரத் துறையில் கணிசமான அளவு மேம்பாடு காணமுடியும், உதாரணமாக இலங்கையில் மீன்பிடித் தொழிலைப்பொறுத்தவரை அதன் 80 வீதமான பகுதி தமிழ்ப் பிரதேசத்திலேயே அடங்கியிருக்கிறது. நவீன இயந்திர சாதனவசதியும் வாலிபர்களது உற்சாகமான உழைப்பும், ஒன்றுகூடும்பட்சத்தில் இந்த மீன்பிடித்தொழில் மூலம் தமிழ்ப் பிரதேசம் நிறைய வருவாயைத் தேடிக்கொள்ளமுடியும், இதனைப் போலவே பனம் பொருள் ஏற்றுமதி மூலம் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுககொள்ளககூடிய வாய்ப்பும் எமககுண்டு, இதனைப் போலவே உலகப்பிரசித்தி பெற்ற இஸ்ரேல் நிபுணரான மெண்டல் என்பவர் வடபிரதேசத்தில் மறிச்சுக்கட்டியிலிருந்து வடககே வெள்ளாங்குளத்தில்திரும்பி கிளிநொச்சி வந்து மணவாளன்-முள்ளியவளை முதலிய இடங்களில் தோடை எவ்வளவு உகந்தது என்றும் அதனால் கிடைககககூடிய வருவாயும் சுட்டிககாட்டியிருககிறார், அதேபோல் மரமுந்திரிகையும். உப்பு மூலம் உற்பத்தி முதலியன

அடுத்துச் சிந்திகவேண்டியது உத்தியோக வாய்ப்பைப் பற்றியதாகும்: இன்று தென்னிலங்கையிலேயே பல லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிககப்பட்டுள்ளனர், தினச்சம்பள ஊழிகர்கள் பதவிக்குககூட அர

## ஐயாறன் எழுதுவது

கோப்பாய்க்குப் பக்கத்திலுள்ள இருபாலை கிராமத்திலுள்ள வீரகத்திவிநாயகர் ஓர் அவசர அழைப்புடன், காரும் அனுப்பியிருந்தார். பல வருடங்களுக்குப்பின் அங்கு கோவில் கும்பாபிஷேகம் நடப்பதாயும் அதற்கு அவசியம் வரவேண்டுமென்றும் பணித்ததால் சில அன்பர்களுடன் நேற்று அங்கு சென்றேன்.

அது கிராமக்கோவில் ஆயிற்றே எல்லாரும் வந்து வழிபடலாமா? என்று கேட்கவேண்டும் போலிருந்தது. சற்றே தயங்கினேன். ஓர் அன்பர் என்மனதை அறிந்து. ''சாதி வேற்றுமையின்றி எல்லாரும் வந்து இங்கு விநாயகரை வழிபடலாம்'' என்றுசொன்னதும், வியப்பாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது. இங்கு கிராம மக்களின் மனதிலும் கருணை பூத்து, உள்ளம் பழுத்துவருகின்றதென்பதற்கும் இது நல்ல அத்தாட்சி. கருணை பூக்கவும், பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும் செய்வது அந்த விநாயகரின் அருள்தான் என்ற பாட்டும் நினைப்பு வருகிறது

இருபாலையிலுள்ள இக்கோயிலைக்கட்டியது. புகழ்பெற்ற சேனாதிராசா முதலியாரின் முன்னோர்களாம். முதலியார் அவர்கள் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பாடம் கற்பித்த குரு. அவர் இக்கோயில் பிள்ளையாருக்கு மூன்று ஊஞ்சல்பாட்டும், நல்லூர் முருகனுக்காகப் பாடல்களும் பாடியுள்ளார். அவர்களது பரம்பரையினரே இப்போது கோயில் திருப்பணியை பொறுப்பேற்று, கும்பாபிஷேகம் செய்துவைத்தனர்.

இருபாலை என்று அந்த ஊருக்கு ஏன்பெயர்வந்தது? பால்காவடி கட்டிக் கொண்டு, நல்லூருக்கு தினசரி அபிஷேகத்தக்கு இங்கிருந்து இருவர் பால் கொண்டு செல்வார்களாம். திருவாரூருக்குக் கிழக்கே பாலையூர், என்றுஒருகிராமம் இருப்பதாயும், அங்கிருந்து திருவாரூர் கோயிலுக்கு தினசரி அபிஷேகத்துக்குப் பால் கொண்டுசெல்வதாக கேள்விப்பட்டதாயும், அதனால் தான் பாலையூர் என்று பெயர் வந்ததென்பது உண்மைதான் என்றும் இருபாலையைச் சேர்ந்த

அதனால் பிராமணர் சந்நிவந்தனம் செய்வதே குறைந்துவிட்டதுடன் இனி பூனூலையும் போடாமல் விட்டு விடக்கூடுமென்றும் இவ்வித முக்கியமான விஷயங்களை குருமார்கள் வளர்க்க வேண்டுமென்றும் கொழும்பு ஸ்ரீ ராமகான சபைக்குப் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றுள்ள திரு. சி. லக்ஷமண அய்யர் அவர்கள், அச்சபையினர் நடத்திய ஸ்ரீராமநவமி உற்சவத்தின் போது கூறினர். அதைப் பலரும் கரகோஷத்தின்மூலம் ஆதரித்தனர். பெரியவர்களிலேயே பலர் சந்தியாவந்தனம் செய்வதில்லை. குடுபத் தலைவர் செய்தால் தானே அவர்களைப் பார்த்து பிள்ளைகள் செய்வர்! அவர் கூறியது போல் பிராமண சமூகம் சீர்கெட்டு வருவதற்குக் காரணம், அவர்கள் சமய ஆசார அனுஷ்டானங்களைவிட்டு ஆக்கைக்கே இரை தேடி அலைவதுதான்'

ஸ்ரீராமகான சபையார். சம்ஸ்கிருத வகுப்புகள் நடத்தியும், பல போட்டிகள் வைத்தும்சிறுவர்களிடையே ஆஸ்திகத்தை வளர்த்து வருகின்றனர் சென்ற 30 வருடங்களாக இயங்கிவரும் இச்சபை, வரவர நல்ல பணியாற்றி. காஞ்சி காமகோடி, சிரிங்கிரி சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசிகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீராம நவமி உற்சவத்திலே, பல பெண்மணிகள் சேர்ந்து பஞ்சரத்ன கிருதிகளை பக்தியுடன் இனிமையாகப் பாடியது, திருவையாற்றுக்கும் தமிழகத்துக்கும் வழிகாட்டுவது போல் இருந்தது. இக்கோஷ்டியினர் திருவையாறு உள்ளிட்டு தமிழகத்துக்குச் சென்று பாடுவது, ஈழத்தின் பெருமையை, தமிழகத்துக்குப் புலப்படுத்துவதாக இருக்கும். இப்பாட்டுகளின் கருத்துக்களை, அவர்கள் வருடா வருடம் வெளியிடும் மணமுள்ள அழகிய மலரில் வெளியிட்டால் பொருள் உணர்ந்து கேட்டும் பயனடைய பலருக்கும் வாய்ப்பாக இருக்கும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக கொழும்பு விவேகானந்தா சபையிலே, பாடிய ஒரு சிறுபெண்ணின்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

னர்.

கொள்கை அறிக்கைகள் தேர்தலுக்குத் தேர்தல் சமயத்தில் வெளியிடப்படுவதும் தேர்தல் முடிந்தபின் அவற்றைக் கட்சிகளும் வேட்பாளர்களும் மட்டுமல்ல வாக்காளர்களும்கூட மறந்துவிடுவது வழக்கம்.

நேர்மையானர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வர். அரசியலும் தூய்மைபெறும் ஜனநாயகமும் வெற்றிபெறும் வேட்பாளர் மனுத்தாக்கல் செய்யும் இன்றைய தினத்திலாவது இதைச் செய்ய கட்சிகள் முன்வருமா?

கைமுல் முதலான கிடைத்தது. ஆண்டுதோறும் 15 லட்சம் ரூபாவுககு மேற்பட்ட பொருட்கள் ஏற்றுமதியாகி கொண்டு இருகசின்றன. இதனல் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ஆகியவைகளைச் சேர்ந்தவர்களே அதிகம் நன்மை

### உருளைக்கிழங்கு வெங்காயம்

கே: தங்களை வெங்காய எம். பி, கிழங்கு எம். பி. என்று எல்லாம் கிண்டலாக குறிப்பிடுகிறர்களே அது ஏன்?

ப: ... பிரேரணையை நிறைவேற்றச் செய்தேன்' பனம் பொருள் ஏற்றுமதி மூலம் இந்தியா பெரும்பயனடைகிறது. அதே போல் நாமும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து பணம் சம்பாதிக்கலாம், பலவிதமான பனம்

# ‘எத்தனை முறை அவகாசம் கொடுப்பது?’

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிபட்டால் பரவாயில்லை சத்தியாக்கிரகத்தின் போது அத்தனை ஆண்தொண்டர்களின் மத்தியில் தன்னந்தனிப் பெண்ணக நின்று கைதாகி, தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒரேயொரு குற்றத்திற்காகத்தான் அவரும் ஏச்சும் பேச்சும் வாங்க வேண்டியிருக்கிறது.

“ஆனல் நீங்கள் தாக்கத் தாக்க, ஏச ஏச நாங்கள் வளர்கிறேம். அங்கே எங்களுடைய மஜாரிட்டி கூடுகிறது” என்று சொல்லிமுடித்தார்.

## சாவகச்சேரி நவரத்தினம்

சாவகச்சேரி நவரத்தினம், தளபதி ஐயாவுக்கு அஞ்சலி செலுத்தி தனது பேச்சை ஆரம்பித்து, மலைநாட்டு மக்களைப் பாதிக்கும் இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டதற்கும் பிரஜாவுரிமைச் சட்டத்தை தமிழ்க்காங்கிரஸ் 1948-ம்ஆண்டு ஏற்றதற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்ட முனைந்தார்

1948-ம் ஆண்டிலும் மலையகத் தொழிற்சங்கங்கள், அரசியற்கட்சிகள், இந்திய அரசாங்கம் எல்லாமே ஒருமனதாக பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்தாகவும் ஆனல் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை தொண்டமான், இந்திய அரசாங்கம் உட்பட எல்லாருமே ஏற்றுக் கொண்டதாகவும் இது தான் வித்தியாசம் என்றார்.

## க. பொ. இரத்தினம்

ஊர்காவற்றுறையில் நவரத்தினத்துக்கு 200 பேருக்கு முன்னல்தான் இரத்தத் திலகமிட்டதாகவும் இந்தக் கூட்டத்திலோ 20,000 மக்களுக்கு முன் தனக்கு இரத்தத்திலகமிட்டதற்காகப் பெருமைப்பட்டுக் கொண்டார் பண்டிதர். ‘அடித்தாலும் மிதித்தாலும் நான்கு முறை மீண்டும் மீண்டும் தமிழரசுக்கட்சியையே தமிழ்மக்கள் நம்பி ஆட்சி மன்றத்திற்கு அனுப்பிக் கொண்டிருப்பது உலகம் காணு வரலாறு என்பதும் பண்டிதரின் கருத்து.

## பாட்டுப் போட்டி

தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் செல்வி திசவீரசிங்கி, ‘எண்ணம்போல ஜி ஜி வந்தார் அம்மம்மா!’ என்றும் ‘அடுத்து வரும் பொதுத் தேர்தல் பாரத யுத்தம்; அதில் தமிழ்க்காங்கிரஸே வென்றிடவே கொண்டிடு சித்தம்’ என்றும் சினிமா மெட்டில் பாடினர். தமிழரசார் விட்டுவிடுவார்களா? துடிப்புள்ள ஒரு இளைஞன் வந்தார் அடுத்து. ‘தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்’ என்ற சினிமாப் பாட்டு மெட்டில் ‘யாழ்நகரில் இருந்து 4 தேர்தலில் பொன்னம்பலம் போனரே 20 ஆண்டுகளில் முடிவடைந்த பின்னர் என்னத்தைச் கிழித்தாரே’ என்று ஆரம்பித்து ‘இந்தத் தேர்தலில் மூன்று மொட்டையர் காசிக்குப் போவாரே’ என்று பாடி முடித்து சலசலப்பை உண்டாக்கினர்.

## பருத்தித்துறை துரைரத்தினம்

பருத்தித்துறை துரைரத்தினம், பேசவந்தாலும் கலகலப்புக்கு குறைவிருக்காது: மகாபாரதத்திலிருந்தும், பைபிளிலிருந்தும், புராணங்களிலிருந்தும் அனுயசமாக உதாரணங்களையும் குட்டிக் கதைகளையும் வாரி வழங்கினர். ‘ஒரு குடம் பாலில் ஒரு துளிவிஷத்தைக் கலந்தாற் போல எங்களையெல்லாம் அனுப்பி விட்டு ஒன்றிரண்டு தமிழ் காங்கிரஸ் காரர்களையும் அனுப்பி விடுவதால்தான் தமிழ் மக்களுக்குப் பலன் கிடைக்காமற் போகிறது’ என்று குறைபட்டுக் கொண்டே பேச்சை ஆரம்பித்தார்.

‘மீண்டும் மீண்டும் சிங்களக் கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதில் பிழையொன்றுமில்லை; எங்கள் உரிமைகளைப் பெற நாங்கள் எந்தப் பசாசுடனும் சேரத் தயார்’ என்று அறிவித்துவிட்டு, “திரு. பொன்னம்பலத்திற்கு தனது சைவத்திலே நம்பிக்கையில்லாததால்தான் சும்மா இந்துப் பல்கலைக்கழகம், இந்துப் பல்கலைக் கழகம் என்று சத்தமிட்டுக் கொண்டிருக்கிறர். இப்பொழுது இந்துப் பல்கலைக்கழகம் என்பதை விட்டு விட்டு, யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் என்று பாட ஆரம்பித்திருக்கிறர்” என்று கிண்டல் செய்தார்.

## கோப்பாய் கதிரவேலுப்பிள்ளை

கோப்பாய் கதிரவேலுப் பிள்ளை பேச வந்தபோது ஒருவர் பின் ஒருவராக வந்து மாலைகள் போட்ட வண்ணமாக, பேச்சுக்குத் தடையாக இருந்தார்கள், “மாலைகளைக் கழட்டிப் போடவே நேரம் செலவாகிறது: மாலைகள் போடுவதை நிறுத்திக் கொண்டால் நல்லது. மீண்டும் மீண்டும் சொன்னல் கருத்துக்கள் ஏறும்; மீண்டும் மீண்டும்போட்டால்மலர்கள் வாடும்” என்று நாசூக்காக விஷயத்தைச் சொன்னர்.

இந்த மலர்மாலைகள் போடும் விஷயத்திலே ஒரு வேடிக்கை என்னவென்றல், தமிழரசுக்கட்சி மேடையாக இருக்கட்டும், தமிழ்காங்கிரஸ் மேடையாக இருக்கட்டும் இரண்டிலுமே, முதலில் போடப்பட்ட மாலைகளை, மேடைக்குப்பின்னல் போய் வாங்கிக் கொண்டு மேடைக்கு முன்னல் வந்து மீண்டும் அதே மாலைகளைத்தான் போட்டுக் கொண்டிருக்கிறர்கள். வெகு சிலர்தான் தாங்களாகவே மாலை கொண்டுவந்து போடுகிறர்கள; எதற்காக இந்த வீண் சிரமமும், காலவிரையமுமோதெரியவில்லை.

அதுபோகட்டும், சித்தாந்தப்பட்டதாரியல்லவா கோப்பாய் கதிரவேலுப் பிள்ளை எனவேசைவசித்தாந்தத்தைத் தொட்டுக்காட்டி, ஆன்ம ஈடேற்றத்திற்கு விடுதலைக்கு, ஆணவம் கன்மம், மாயை என்ற மூன்றையும் ஒழிக்கவேண்டும்; அதைப் போன்றே தமிழ்மக்கள்விடுதலையடைய மூன்று தமிழ்க் காங்கிரஸ் எம். பிக்களையும் தோற்கடிக்க வேண்டும்’ என்றுபேசி முடித்தார்.

## கிளிநொச்சி ஆலாலசுந்தரம்

இரவு மணி 12-30க்குத் தான் ஆலாலசுந்தரம் வந்து சேர்ந்தார். அவர் வருவதற்கு முன்பே, பதினெரு மணிக்கே திரு. செல்வநாயகம் கூட்டத்தலைமைப் பொறுப்பை டாக்டர் நாகநாதனிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

பன்னிரண்டரை மணிக்கு மார்ட்டினின் ஊர்வலம் வராததைக் கண்ட, ஆலாலசுந்தரம், ‘இனிமேல் ஊர்வலம் வந்தடையச் சுணங்கும் ஒவ்வொரு பதினைந்து நிமிடத்துக்கும், மார்ட்டினுக்கு 500 மெஜாரிட்டி கூடுகிறது என்று கணக்கிட்டுக் சொன்னர்கள் என்று கூட்டத்தினரை உற்சாக மூட்டினர்.

“மற்ற எம். பிக்களைப் போல நாங்கள் சாதாரண முனிசிப்பலட்டி ரோட்டுக்குத்தார் போட்டோம்; பாலம் கட்டினேம் என்று சொல்லமாட்டோம் ஏனெனில் எங்களுடைய இலட்சியம் தமிழ்மக்களின் அரசியல் வாழ்வுப்பாதையில் மண்டிக்கிடக்கும் புதர்களை அழித்துத் தார் போடுவது தான்; அங்கேயுள்ள மேடு பள்ளங்களை அழித்து, தமிழினத்தின் பல்வேறு சமூகங்களிடையே பாலம் போடுவதுதான் எங்கள் வேலை” என்று முடித்தார் ஆலாலசுந்தரம்.

## சுதாநாயகன் மார்ட்டின்

முற்றவெளிக் கூட்டத்தின் யாழ் நகர ஊர்வலத்தின் தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் பலப்பரீட்சையில் பிரதான கதாநாயகனக விளங்கும் யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. வி. எக்ஸ் மார்ட்டினின் ஊர்வலம் நள்ளிரவையும் தாண்டி, 12-50க்குத் தான் முற்றவெளிக்கு வந்து சேர்ந்தது.

திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஊர்வலம் முதல் இரவு பத்தரை மணிக்கு வந்து சேர்ந்ததல்லவா? அதற்குப்பின் எவ்வளவுக் கெவ்வளவு நேரம் கழித்து வருகிறதோ! அவ்வளவுக்கவ்வளவு பெருமையும் மதிப்பும் அதிகமென்று நினைத்தார்கள் போலும்.

மார்ட்டினை மலர்மாலை மறைக்க, ‘டன்லப் ரயர் விளம்பரப் பொம்மை போலக் காட்சியளித்த திருவாளர் மார்ட்டினை, ஆதரவாளர்கள் அலாக்ககாத் தூக்கிக் கொண்டு, ஆரவாரமாக மேடைக்குக் கொண்டுவந்து சேர்க்க, ஆலால சுந்தரம் மேடையில் நின்றபடியே ஒரு ‘றன்னிங் கொமெண்ட்ரி’ கொடுத்துக்கொண்டிருந்தார்.

திரு. மார்ட்டின் பேசியதாவது:- “ஐந்து வருடத்துக்கு முன் நான் யாழ்ப்பாணத்தில் வாக்கு கேட்டபோது இந்த முறைபோய் அடுத்தமுறை வாரும் என்று அனுப்பினர்கள். அதனல் தான் இந்தமுறை வந்திருக்கிறேன். நான் பொன்னம்பலத்தை விழுத்தவோ, துரையப்பாவை அழிக்கவோ, பதவி ஆசையாலோ வரவில்லை. மக்களுக்குத் தொண்டு செய்யவே வந்திருக்கிறேன்.

“எனக்கு வேறு கட்சிகளிலிருந்தும் அழைப்பு வந்தது; ஆனல் நான் நன்ருகச் சிந்தித்து தமிழரசுக் கட்சிதான் சிறந்த கட்சியெனக் கண்டு அதில் சேர்ந்திருக்கிறேன்.

‘பிறப்பாலும், படிப்பாலும், குணத்தாலும் எனக்குத் திட்டத் தெரியாது. திருவாளர் பொன்னம்பலம் ஒரு வீரர். அந்தப் பெருமான் நல்ல தகைமை பெற்றவர்.

‘உங்கள் சாவீடு, கல்யாண வீட்டுக்கெல்லாம் அடிக்கடி வருவேன், சில்லறை வேலைகளையெல்லாம் செய்து கொடுப்பேன்என்று துரையப்பா சொல்கிருராம். அது உண்மையாக இருக்கலாம். அவரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினல் இந்தச் சில்லறை வேலைகள் செய்ய ஆள் இருக்காது. சாவீடு, கல்யாண வீட்டுக்கும் வரமுடியாது. எனவே, தகைமையுள்ளவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவையுங்கள். அவர் இங்கேயே இருக்கட்டும் என்று மார்ட்டின் கூறினர்.

... தென்னிலங்கையிலேயே பல லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிககப்பட்டுள்ளனர், தினச்சம்பள ஊழியர்கள் பதவிக்குககூட அரசாங்கம் தெற்கிலிருந்து வாலிபர்களை அனுப்பிக கொண்டிருககிறது. இதே வேலையில் தமிழ்மககள் மத்தியில் வேலையில்லாத்திண்டாட்டம் இன்று ஒற்றை சாடசி அமைப்பின்கீழ் என்ருவது தீர்ந்துவிடுமென்று நாம் கனவுதானும் காண்பதற்கில்லை, பதவிகளுககுச் சிங்களவர்களே திணிககப் படுகிருர்களென்பதை அண்மையில் நடந்த 1-ம்தர விசேட ஆசிரியர் பதவி நியமனத்தின் மூலம் நாம் அறிலாம், பதவிகள் தொகை 150 நமககுககிடைத்தது ஆக 5, அதாவது 3 1/2 வீதம், காலியான இடமோ அதிகமானவையாகும், சமஷ்டி அமைப்பின் கீழ் நமது வாலிபர்களின் வேலையில்லாப் பிரச்னையை கணிசமான அளவுக்கேனும் தீர்த்துககொள்ளமுடியும்

## இராணுவ அட்டூழியம்

கே: வடபகுதியில்இராணுவ அட்டூழியம் மிதமிஞ்சிவிட்டதென்று பொதுமககள் அடிககடி புகார்செய்கிருர்கள் அதிலும் தங்கள் தொகுதியை பொறுத்தவரை இது ஒரு நிரந்தர தலையிடியாகி விட்டது இப் பிரச்னையை தாங்கள் எப்படிச் சமாளிககிறீர்கள் என்பதை அறியலாமா?

ப: வடபகுதியில் கள்ளககுடியேற்றம், கள்ளக கடத்தல் ஆகியவற்றை தடுப்பது என்ற போர்வையில் இராணுவம் அனுப்பிவைககப் பட்டிருககிறது ஆனல் வத்தளை, கெந்தளை, இரத்தினபுரி முதலான இடங்களில் கள்ளககடத்தல் அமோகமாக நடககிறகதன்பதை பிரதமரே ஒப்புககொண்டிருந்தும் அப்பகுதிகளுககு இராணுவம் பயன்படுத்தப்படவில்லை இதிலிருந்து நாம் அறியககூடியது நம்மை அடிமைப்படுத்தி அடககிஒடுக்குவதற்காகவே அன்றி வேறு எக காரணம் கொண்டும் இராணுவம் இங்கே அனுப்பப்பட வில்லை என்பதாகும். எங்கள் கையில் ஆட்சி இல்லை என்ற வாய்ப்பை வைத்துககொண்டு அரசாங்கம் இப்படி எல்லாம்வெருட்டிப்பார்ககிறது. அட்டூழியச் சம்பவங்கள் பல நடந்துவிட்டன அவைபற்றி நான் பாராளுமன்றத்தில் அவ்வப்போது பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்தேன். பிராந்திய அதிகாரிகளின் அறிககைகளை கிளிப்பிள்ளைப் பாடமாக ஒப்படைத்து சமாளிககிருர் என்பதைக காண்பதற்கு எனககு அதிக நாள் செல்லவில்லை. இந்த நிலையைச் சிந்திககும்போது சாட்சியின் காலில் விழுவதிலும் பார்கக எதிரியின் காலில் விழுவதால் ஏதாவது ஆறுதல் கிடைககும் என்ற நம்பிககை எனககு ஏற்படுகிறது! அடககுமுறை நோககமாகக கொண்டு இராணுவம் வைககப்பட்டிருப்பதால் அதை இலகுவில் அரசாங்கம் அகற்றி விடாது என்பது எங்களுககுத் தெரியும். எனவே மாற்றுவழியாக சில யோசனைகளை அரசாங்கத்திற்கு அவ்வப்போது நான் கூறிவந்திருக்கிறேன். இராணுவ வீரர்களுககு பொலிசாரைப் போன்று இலககம் வழங்குவது, பொலிஸ்-இராணுவ கூட்டுரோந்து, இராணுவத்தின் மீது சிவில் அதிகாரிகளின் கட்டுப்பாடு என்பனவே அவையாகும் இந்த இராணுத அட்டூழியத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதில் இயலுமானவரை நான் பாடுபட்டு வந்திருககிறேன். ஆனல் தேசிய அரசாங்கத்தின் பிடிவாதம் நமககு பூரண ஆறுதலை அளிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தவில்லை நான் பாராளுமன்றத்திலும், பிரதமரிடமும் பிரஸ்தாபித்த போதெல்லாம் ‘ஈழநாடு’ முதலான பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வந்ததுதான் மிச்சம்,

... தினசரி அபிஷேகத்துக்குப் பால் கொண்டுசெல்வதாக கேள்விப்பட்டதாயும், அதனல் தான் பாலையூர் என்று பெயர் வந்ததென்பது உண்மைதான் என்றும் இருபாலையைச் சேர்ந்த ஒருபெரியவர் கேட்டார். விவரம் தெரிந்த அன்பர்கள் எழுதி அனுப்புமாறு வேண்டுகிறேன்.

0 0 0

பூனூலை (தமிழகத்தில் கிராஸ்பெல்ட், என்கின்றனர்) ஏன்போட்டுக்கொள்ள வேண்டும்? சந்தியாவந்தனம் ஏன் செய்யவேண்டும்? அதனல்என்ன பயன்? எனறு பிராமணப்பிள்ளைகளில் பலருக்கும் தெரியாதென்றும் ...

... பாக இருக்கும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக கொழும்பு விவேகானந்தா சபையிலே, பாடிய ஒரு சிறுபெண்ணின் கணீரென்ற வெண்கல நாதத்தை மீண்டும் ஸ்ரீராமகான சபையில் கேட்டேன். திருமதி விஜயலட்சுமி குமாரசாமி அன்று செய்த கச்சேரி பலர் பாராட்டையும் பெற்றதுடன் இவ்வித இசையை வெகுகாலமாக கொழும்பு கேட்க முடியவில்லை என்றும் பலரும் பேசிக் கொண்டனர்.

ஈழத்துக்கே பெருமையளிக்கக்கூடிய இப்பெண்மணிக்கு கொழும்பு ரேடியோவில் பாட ‘சான்ஸ்’ கொடுக்கவில்லையாம். அட கடவுளே.

## மாணவர் படும் கஷ்டம்

கொடிகாமம், வியாழன் சாவகச்சேரித் தொகுதியிலுள்ள உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்ருக்குறை காரணமாக வகுப்புக்கள் ஒழுங்காக அமைக்கப்படவில்லை.

விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப் படுகின்றனர். இதனல் அவர்கள் ஓய்வுநேரங்களில் பணம் செலுத்தித் தனிப்பட்ட கல்வி நிலையங்களில் கற்றுவருகின்றனர்.

21 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இம்மகாவித்தியாலயத்தில் 17 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர். உயர் வகுப்பிற்கு தமிழும அரசியலும் கற்பித்துவந்த ஆசிரியர் ஒருவர் பலாலி விசேட ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராகச் சென்றுள்ளதால் அடுத்த தவணை முதல் இவ்வகுப்புகள் மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்ருக்குறை பற்றி பெற்ருேர் ஆசிரியர் சங்கம் கல்வி அதிகாரிகளுக்குப் புகார்செய்துள்ளது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணத்திலுள்ள அப்பையா அன்கோ புடவை ஸ்தாபனத்தில் தவறவிடப்பட்ட கூப்பன் புத்தகமொன்று சு. பாலசுப்பிரமணியம் என்பவரால் கண்டெடுககப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைககப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுககொள்ளலாம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org